

# நாண

நிலாதமிழின்தாசன்

பொது நூலகம், சாவகச்
1994

# நாளை

நிலா தமிழின் தாசன்

இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு

நாளை
(கவிதைத் தொகுப்பு) - நிலா தமிழின்தாசன்
வெளியீடு - தமிழ்த்தாய் வெளியீடு
முதற்பதிப்பு - புரட்டாதி, 1993.
பதிப்பு - மாறன் பதிப்பகம்,
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.
விலை - ரூபா 60/-

## காணிக்கை

தாய் மண்ணை நேசித்துத்
தாயென்றே பூசித்து
பேய் போலு மந்நியப்
பெரும் படை சிதறிடப்
பாய் கின்ற புலியாகிப்
பலங் கொண்டு போர் செய்து
சாய்ந்த நம் மாவீரர்
சந்தனப் பாதங்கட்கே!

## வாழ்த்துரை

தமிழீழத்தின் தலைநகரான திருக்கோணமலை, உலக ளாவியரீதியிற்கூட பல சிறப்புக்களையும் முக்கியத்துவங்களை யும் கொண்ட நகரமாகும்.

கலை, பண்பாட்டுச் செழிப்பிலும் தனக்கென நிலையான தகுதிகளைக்கொண்ட பிரதேசம் திருக்கோணமலை.

இதற்குச் சான்றாக அங்கு செறிந்துவாழும் கலை இலக் கியவாதிகளை, கவிஞர்களைக் கூறலாம்.

நெடுநாட்களாகவே விடுதலை உணர்வு பொங்கும் கவிதை களைப் படைத்துவரும் கவிஞர் நிலா தமிழின்தாசன் அவர்கள், தனித்தன்மை வாய்ந்த கவிஞராவார்.

எமது மாவட்டத்தில் வாழும் கவிஞர்களில் எம்மோடு நெருக்கமானவர்களில் முதன்மையானவரும் அவரே.

கவிஞர் நிலா தமிழின்தாசனின் கவிதைகளில் நிலாவின் குளிர்ச்சியைவிட, நெருப்பின் தகிப்பையே அதிகமாகக் காண்கின்றேன்.

உலகின் எந்த விடுதலைப் போராட்ட வரலாறுகளிலும் கவிஞர்களினது பங்களிப்பு கட்டாயமானதாக இருந்திருக்கின்றது.

அந்த வகையில் இந்தக் கவிஞரினது பங்களிப்பும் தமிழீழ விடுதலைப் போராட்டப் பயணத்துக்கு ஒரு கைவிளக்காய் அமையும் என்பது, எனது நம்பிக்கை.

அன்னாரது நீண்ட நாள் ஆசை, தலைவர் அவர்களின் விருப்போடு நிறைவேறுவது கவிஞர் பெற்ற நற்பேறாகும்.

பல்வேறுபட்ட நெருக்கடிகள் சூழ்ந்த நிலையிலும் சலியாது, இந்த, நாளை என்ற கவிதை நூலைப் படைத்தளித்த கவிஞர் நிலா தமிழின்தாசன் அவர்களின் கலைப்பணி வளரவும், ஆற்றல் மேலும் சிறக்கவும், எனது மாவட்ட மக்களுடனும் சகபோராளிகள் சார்பாகவும் நெஞ்சார்ந்த வாழ்த்து மலர்களைத் தூவி வாழ்த்துவதில், மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.**

இவ்வண்ணம்
அன்பரசு (குணம்)

சிறப்புத் தளபதி,
*திருக்கோணமலை மாவட்டம்*
தமிழீழம்.

## உள்ளக்கதவை மெல்லத்திறந்து....

எனது பதின்மூன்றாவது வயதில் "எதையோ" எழுதி வீட்டுக்கதவில் ஒட்டிவைத்தபோது, பக்கத்திலே குடியிருந்த 'பாக்கியமக்கா' எனும் சகோதரி அதனைப் பார்த்துவிட்டு, "எடேய் நீயும் கொண்ணனைப்போல கவிஞனாகி விட்டியே" என்று கேட்டு என் முதுகைத் தடவியபோது, நான் ஒருவகைக் கூச்சத்துடன் நாணி நெளிந்து நின்றது, நேற்றுத்தான் நிகழ்ந்தது போல பசுமையாக நினைவில் பதிந்து கிடக்கிறது.

எனது குடும்பத்தினருக்கு இருந்த தமிழ்ப்பற்றும் இனப் பற்றும் கலை இலக்கிய நாட்டமும், எனக்கும் கருவோடு கலந்து விட்டதில் வியப்பில்லை. எனது தாயாரின் தமிழ் சுவைக்கும் தாலாட்டும், சதா உவமானங்களோடு செய்யுள்களின் செவ்விய வரிகளைக் குழைத்து உரையாடும் போக்கும் தந்த தாக்கமும்-

நாட்டுக்கூத்து அரங்கேற்றவேண்டுமென்ற வெறியில், எனது தாயாருக்குத் தன்கையாலேயே கட்டிய தாலிக்கொடியினை ஒருமுறையல்ல இருமுறைகள் கழற்றி, விற்றுச் செலவு செய்த என் தந்தையாரின் கலையுணர்வும், கம்பராமாயணம் மகாபாரதம் போன்றவற்றில் அவருக்கு இருந்த ஈடுபாட்டின் செழிப்பினது தெறிப்பும் -

கவிஞரான என் தமையனாருக்குத் தமிழ்மீது இருந்த தணியாத மோக அலையில் நான் பெற்ற குளிப்பும் -

இலக்கியத்தின்மீது எனது சகோதரிக்கு இருந்த பிடிப்பும் -

நான் வாழ்ந்த மண்ணும் மக்களும் காலமும் என்னைக் கவிஞனாக்கிற்று என்பேன்.

தவிர, பள்ளிக்கூடத்தில் படித்த பாரதியார் பாடத்தில், ''பாரதியார் சின்னவயதில் எங்காவது ஓரிடத்தில் இருந்து ஏதாவது எழுதிக்கொண்டிருப்பார்'' என்ற வரிகள் என் பிஞ்சு நெஞ்சில் ஆழமாகப் புதைந்துகொண்டதுடன், மந்திரம் போல ஒருவகை வெறியை ஊட்டி என்னை இயக்கி, இனிதான கவிதைகளை எழுதவைத்தது என்பதும் உண்மை.

இலக்கியம் மனித வாழ்வை வளம்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது; அது மனித வாழ்வோடு இரண்டறக்கலந்தும் இருக்கவேண்டும் என்பது எனது நோக்கம்.

அவ்வாறே இந்த நாளை என்ற கவித்தொகுப்பிலுள்ள கவிதைகள் அனைத்தும், இன்றைய தமிழீழ மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து நிற்பவைகள் என்பது, எனது நம்பிக்கை.

திருக்கோணமலை மண்ணின் வாசனை இந்தக் கவிதைகளில் சிறப்பாக வீசலாம்; ஏனெனில் இந்தச் சிறிய கவிஞன் பிறப்பெடுத்தது அந்தப் புனித பூமியில்தான்.

எந்தக் கவிஞனும் எழுத்தாளனும் கலைஞனும் தான் பிறந்த இனம், பிரதேசம், பேசும் தாய்மொழி இவைகளைப்

பிரதிபலிப்பவனாகவே இருப்பான். அப்படியிருக்கத் தவறியவன் "தவறியவனே"!

இனவாதப் பேய்களுக்கு இரத்தப்பசி எடுக்கும் போதெல்லாம், திருக்கோணமலையின் தெருக்கள் தமிழர் குருதியால் சிவப்பது வழக்கம்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால், நெருக்கடி என்ற நெருப்புச் சூழ்ந்து நின்றெரிக்கிறது தமிழீழத்தின் தலை நகரிலே! அந்த நெருப்பிலே சுடுபட்டதுதான் எனது நெஞ்சும். இதனால், எனது சின்னவயதுக் கவிதைகளிற்கூட சின நெருப்புக் கனலத் தொடங்கியதில் வியப்பில்லை.

04.04.1984 அதிகாலை நான்கு மணிக்கு, என் தந்தை காலமானார். ஆனால் அதற்கு முதல்நாளான 03.04.1984 அதிகாலை மூன்று மணிக்கே, என்னைப் படுக்கையில் வைத்து வேட்டையாடப் பாய்ந்தது சிறீலங்காவின் ஏவற்படை.

நான் 'விழிப்போடு' இருந்தமையால் அவர்கள் வெறுங் கையோடு திரும்பினர் ஆயினும் பெற்று வளர்த்து, என்னை மார்மீதும் தோள்மீதும் சுமந்து பாராட்டிச் சீராட்டி வளர்த்த என் தந்தையின் உடலுக்கு, நால்வரில் ஒருவனாய்த் தோள் கொடுத்துச் சுமக்கவோ, அள்ளி அள்ளி அமுதூட்டிய தந்தைக்கு ஒரு பிடி மண்கூடப் போடவோ, எனக்கு வாய்ப்பில்லாது போனது வானளாவிய வருத்தமே.

நான் ஆயுதப் போராட்டம் எதுவும் செய்தமைக்காகத் தேடப்படவில்லை; காகிதப் போராட்டம் செய்தமைக்காகவே தேடப்பட்டேன். அதாவது, கவிதைகளை ஆயுதமாகப் பாவித்த குற்றந்தான். ஏதோ ஒருவகையில் எனது கவிதைகள் அவர்களுக்குக் கலக்கத்தை ஊட்டியிருக்கவேண்டும்.

மேற்படி நிகழ்வு ஒரு சோக நிகழ்வாகக் காணப்பட்டாலும் அதிலொரு சுகத்தையும் நான் அனுபவித்திருக்கின்றேன். ஏனெனில், அந்த நிகழ்வின்மூலம் எனது கவிதைகளின் இலக்குப் பிசகாமைக்கான சான்று வெளிப்பட்டமைதான்!

இந்தத் தொகுப்பு 'நாளை'க்கான கவிதைகள் நேற்று வரை நான் எழுதியவைகள். இவைகளுக்கு முன்னர் என்னால் எழுதப்பட்டவைகள் இத்தொகுப்பைப் போல ஒரு முப்பது தொகுப்புக்களுக்காவது போதுமென்பது, என்னைத் தெரிந்த சிலருக்கு மட்டும் தெரிந்த உண்மை.

ஆனால், சுமார் இரண்டு தசாப்தங்களாக ஒரு சிறு தொகுப்பையாவது வெளியிட வேண்டும் என்ற எனது தாகம் நேற்றுவரை நிறைவேறாது நின்றமை, எனது நெஞ்சைப் பனங் கருக்காய் அறுத்துக்கொண்டிருந்த வேதனையான விடயம்.

எனது இலக்கிய வாழ்வில் எண்ணற்ற இடர்களைச் சந்தித்திருக்கின்றேன். நாவிலே குறளும் மனதிலே கறளும் கொண்டவர்கள் மலிவாகவே உள்ள போதும், சோதி மயமான சில நல்ல உள்ளங்களையும் தரிசிக்கும் பேறும் கிடைத்தே இருக்கின்றது.

நேற்றுக்கூட, என் கவிதைகளை இருட்டிலே புதைக்க முற் பட்டனர் சில முன்னாளைய முற்போக்குகள். ஆனால் அவர் களுக்கே எனது முதற்கண் நன்றிகள். ஏனென்றால் அவர்க ளின் மனக்குகைகள் உமிழ்ந்த இருட்டுத்தான், என்னை ஒரு ''மா வெளிச்சத்தின்'' முன் கொண்டுபோய்விட்டது. ஆம்...! நான் இறுதியாகவும் நம்பிக்கையில் உறுதியாகவும் நாடியது...... காவியத் தலைவனும் தமிழீழத் தேசியத் தலைவருமான திரு. வே. பிரபாகரன் அவர்களையே. அந்தப் பெரு வெளிச்சத் தின் முன்னர் என் கவிச் சுமையினையும், மனச்சுமையினையும் விரித்த போது......!

தலைவன் மட்டுமல்லாது பலதகுதி ஒருங்கிணைந்த கலை ஞனுமான அவர், நாளை என்று கூறாது, இன்றே 'நாளை' என்ற இந்தக் கவிதைப் படையலை அழகுருவாக்கி, அள்ளிப் பருக ஆவன செய்துவிட்டார். அந்த வரலாற்று நாயகனை வாயார மனதார வாழ்த்தி, அவர் முன் எனது இதயச் செடியில் பறித்த நன்றிப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

இக் கவிமலரை முகர்ந்துபார்க்கும் கலைஞர்களாகிய உங்களுக்கே இதன் தரத்தினை உரைத்துப் பார்க்கும் தகுதியும், கடமையும் உண்டு. இலக்கண வரம்புகளை எட்டித் தொடாத வன் நான். நெஞ்சில் கொதித்த உணர்வலைகளை, இலக்கிய மாய் ஏட்டில் வடித்திருக்கிறேன்; இனங்கண்டு ஏற்றுக்கொள் வது உங்கள் பொறுப்பு.

இறுதியாக, இக்கவிதை நூல் வெளிவர எனக்கு உறுதுணை யாக இருந்த திருமலை மாவட்டப் போராளிகள், மற்றும் நண்பர்களோடும், அழகான அட்டைப்படம் வரைந்தளித்த ஓவியர் தயா, கேட்டவுடன் முகம் சுழியாது சிரமம்பாராது முன் னுரை எழுதித்தந்த மூத்த கவிஞர் இ. முருகையன் ஐயா அவர் கட்கும், துரிதகதியில் பதிப்பித்து வெளியிட்ட தமிழ்த்தாய் வெளியீடு நிறுவனத்தாருக்கும்,வாழ்த்துரை வழங்கிக்கௌரவித்த திருக்கோணமலை மாவட்ட சிறப்புத் தளபதி அன்பரசு (குணம்) அவர்கட்கும், இந்நூலைக் காசு கொடுத்து ஆர்வத்துடன் வாங்கிப் படிக்கும் வாசகநேயர்கட்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்து, உங்கள் ஆதரவுதந்த நிமிர்வில், நாளையினை 'நோக்கிய என் பேனாவின் நகர்வுடன் இணை கிறேன்.

நன்றி.

'வள்ளிமனை',
மீசாலை தெற்கு,
மீசாலை.
19 - 8 - 1993

இப்படிக்கு,
அன்புடன்,
நிலா தமிழின்தாசன்.

# முன்னுரை

கவிஞர் நிலா தமிழின்தாசன், தமது கவிதைகளைத்தொகுத்து நூல் வடிவிலே கொண்டுவருகிறார். அந்தக் கவிஞர் தந்துள்ள ஆக்கங்களின் பண்பு நயங்களை அடையாளங்காட்டு முகமாக இந்த முன்னுரையை வரைய முற்படுகிறேன்.

அன்பர் தமிழின்தாசன் யார் என்பதை, அவர் சூடியுள்ள பெயரே நமக்குப் புலப்படுத்திவிடுகிறது. தமிழ் மொழியைப் பொறுத்தவரை, பாரதிக்குப் பின்னர் கவிஞர் பலரும் மொழிப் பற்று வாய்ந்தவர்களாக முகிழ்த்துள்ளனர். பலவிதங்களிலே தீவிரவாதியாக இருந்த பாரதியார், தமிழ்ப்பற்றைப் பொறுத்த வரையிலுங்கூடத் தீவிரவாதிதான்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல
இனிதாவது எங்கும் காணோம்''

என்று, தயக்கமோ தடுமாற்றமோ இல்லாமல் அடித்துக் கூறிய அந்த அரும்புலவர்,

''வானம் அளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே''

என்றும் வாழ்த்துகிறார். செந்தமிழ் நாடு என்று சொன்னவுடனேயே தேன் வந்து பாயும், பாரதியாரின் செவிகளிலே. அவ்வளவு அன்பு அவருக்கு - அன்னை மொழிமீதில்.

அவரைத் தொடர்ந்து வந்த பாரதிதாசன் என்றால் என்ன, வாணிதாசன், கண்ணதாசன், கா. சி. ஆனந்தன் என்றால் என்ன தமது தமிழ்ப்பற்றையும் பாசத்தையும் கூசாமல் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

''செந்தமிழே தாயே
எங்கள்
சிந்தனை வாய்மொழி செய்கையும் நீயே''

என்பதுதான் இன்று ஈழத்தமிழர்களின் இதய கீதமாக உள்ளது, சரியாகச் சொல்லப்போனால், இந்தியத் தமிழர்களைவிட, ஈழத் தமிழர்களே தமிழுணர்வின் தேவையையும் பயன்பாட்டையும் நன்கு தெளிந்துகொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

இதற்குச் சில காரணங்கள் உள்ளன.

## 2

இந்திய நாட்டைச் சேர்ந்த தமிழ்ப்பற்றாளர்கள், முன்பெல்லாம் பண்டைத் தமிழரின் கலை, இலக்கிய, பண்பாட்டு மேம்பாட்டினாலே கவரப்பட்டு, அதனையே தமது தமிழ் உணர்வின் அடிப்படையாகக் கொண்டனர் அத்துடன் ஆரிய எதிர்ப்பு எண்ணங்களின் பக்க விளைவாகவும் அவ்வுணர்வு ஓரளவு வலிமை பெற்றது. 'சைவத் தமிழ்' சார்ந்தவர்களாகிய கா. சுப்பிரமணியபிள்ளை. மறைமலையடிகள் முதலானோர் 'தனித்தமிழ்' என்னும் எண்ணக் கருவை வளர்த்தெடுக்கத் துணை நின்றனர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும் தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்

திரனார் போன்ற சிலரும் தனித்தமிழ் நெறியை அழுத்திக் குர லெழுப்பி வந்தனர்.

மறுபுறத்தில், சீர்திருத்தம், மத எதிர்ப்பு, பகுத்தறிவு என்னும் முழக்கங்களுடன் தொடங்கிய திராவிட இயக்க அமைப்புகளும் தமிழ்ப்பற்றாளர்கள் பெருகுவதற்கு ஏதுவாயின. ஆனால் இந்த அமைப்புகள் அரசியல்மயமான பின்னர், தமது கடும்போக்குக ளைக் கைநெகிழவிட்டன. தமிழ்நாட்டிலே, தமிழ் ஆட்சிமொழி என்னும் சட்ட உரித்தைப் பெற்றபோதிலும், இந்தி, ஆங்கிலம் என்பவற்றின் மேலாண்மையை மேவி உயிர்ப்படைவதற்கும் உயர்ச்சி பெறுவதற்கும், தடைகள் பல தொடர்ந்தும் இருந்துவந் தன; இருந்து வருகின்றன.

இன்று தென்னகத்திலே தமிழ் மொழி கடுங்கலப்புகளுக்கு உள்ளாகி, உருத்தெரியாமல் மாறி வருகிறது. இளையோருக்கு என்று வெளிவரும் வணிக நோக்கு இதழ்களில் எல்லாம், முக்காற் பங்குக்குமேல் ஆங்கிலமும் இந்தியும் இடம்பெறுகின்றன. பொது மேடைகளிலும், தொலைக்காட்சியிலும் வானொலியிலும், தமிழ் மொழியைச் சிதைத்தும் திரித்தும் அழுக்குப்படுத்துகிறார்கள். பிற மொழிகளை மிகுந்த அக்கறையுடன் கற்று, வருந்தி வருந்திப் பயின்று திருத்தமாக ஒலிக்கவும் எழுதவும் முன்னிற்கும் மக்கள், தமிழ் என்றதும் அலட்சியப்படுத்திக் கவனக்குறைவாக நடந்து கொள்கிறார்கள்; சோம்பலாலும் அறியாமையாலும் சொற் சோர்வுப்படுகிறார்கள்.

இந்த நிலைமைகளுடன் ஒப்பிடுகையில், ஈழத்தமிழின் நிலைமை எவ்வளவோ மேலானது. இங்கு தமிழ்மொழி உணர்வானது ஓர் ஆற்றல் வாய்ந்த தேசிய விடுவிப்பு முயற்சியுடன் இணைந்துள் ளது. அந்த இயக்கம் அரசியல் உரிமையில் மட்டுமன்றி, கலை, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளிலும் கருத்தூன்றிய ஈடுபாடு கொண்டுள்ளது. அதனாலேதான் இங்குள்ள 'தமிழின் தாசர்கள்' மொழி இனிமையையும் பழமையின் பசுமையையும் மாத்திரம் பன் னிப் பன்னிப் பேசிச் சப்புக் கொட்டிவிட்டு 'அமையும்' நிலை யில் நிற்பவர்கள் அல்லர். இவர்களின் அக்கறை விரிவானது

நாடும் நிலமும் வாழ்வும் வளமும் கலையும் தொழிலும் எழுத்தும் எழுச்சியும் ஆகிய இவையெல்லாம் ஒன்றிணைந்த வகையிலே உயர்ச்சி பெறவேண்டும் என்னும் விழிப்பு, இங்கு காணப்படுகிறது.

நிலா தமிழின்தாசனும் தமது ஆக்கங்களை இந்த நலமிக்க விழிப்பென்ற விளக்கின் ஒளியிலே, பளிச்சிட்டுத் தோன்றும் வண்ணம் இயற்றி வழங்கிவருகிறார்.

''அடிமை என்ற சொல்லை முற்றாய்
அர்த்த மற்றதாக்குவோம்
விடிவை எட்டிக் கொள்ளு மட்டும்
வேறு பற்று நீக்குவோம்''

'உயிர் மூச்சு' என்று மகுடமிட்ட பாட்டொன்றிலே இந்த வரிகளை நாங்கள் படிக்கிறோம். வேற்றவர்களின் மிரட்டலுக்கும், ஒடுக்கி நசுக்கி உரிமை பறிக்கும் அடாத்துகளுக்கும் பணிந்து போகாமல் நிமிர்ந்தெழுந்து பாடுபடும் நேர்மைத் திறத்தை, பளிச்சென்ற சொற்களிலே பாடத்துடிக்கிறார் கவிஞர். அந்தத் துடிப்பின் அதிர்வுகளோடுதான் அவரது மொழிப்பற்றும் மருவிசையாகிப் பரிவுடன் அதிர்கின்றது. அதனாலேதான் அவர் ஆசையோடு பேசுகிறார்-

''தரணி மெச்சும் தமிழெடுத்துப்
பரணி மெத்தப் பாடுவோம்
உரமிருந்த உளத்தில் தூய
உணர்வை அள்ளிச் சூடுவோம்.''

போர்ப்படை ஒன்றின் அணிநடைப் பரபரப்பும் உந்தி முன் செல்லும் ஊக்கத்தின் தாள கதியும் இந்தக் கவிதை அடிகளிலே மிகவும் தெளிவாகக் கேட்கின்றன அல்லவா?

## 3

போர்ப்படை முழக்கமும் எழுச்சிப்பண்ணும் மாத்திரம்தான் நமது கவிஞரின் சிறப்புத்திறன் என்று கருதத் தேவையில்லை. குழைவும் பணிவும் ஆர்வமும் ஈரமும் பொருந்துமாறு 'காதல் ஆகிக் கசிந்து' பாடும் பண்பு நலனும் தமிழின்தாசனிடம் உண்டு.

''புன்னகை பொலிய வீரப்
புலிக்கொடி கையில் ஏந்தி
நின்றருள் புரியும் எங்கள்
நிகரிலாத் தமிழே, தாயே!
மன்னவர் தொட்ட ஞான
மலரடி தொட்டு யானும்
உன்னையே தொழுதேன், அம்மா
உவகை கொண்டருளுவாயே''

பாவரங்கொன்றிலே கவிஞர் கூறிய 'தமிழ் அன்னை வணக்கம்' இது. முன்னைப் புலவர் கைபட்டுக் காலங்காலமாய் மெருகேறிப் பொலியும் ஒரு பாவடிவத்திலே, நைந்த பழமையின் சோர்வுகள் தலைகாட்டாதவாறு கட்டுமட்டாகச் சொற்களை அளந்து மிகவும் பவ்வியமாகப் பாடியுள்ளார் கவிஞர். மரபின் வழமைகளிலும் விளைதிறன் மிகுந்த கூறுகள் இன்னும் உண்டு என்ற உண்மையின் இலக்கியமாக இந்தச் செய்யுள் அமைந்து விடுகிறதல்லவா?

நீடித்துச் செல்லும் போரொன்றின் கடும்பிடியினாலே வெந்து நொந்து வேதனைப்பட்டும் துயரத் தீத்தணலைத் தொடர்ந்து தாங்கியும் தாக்குப் பிடித்து வரும் ஒரு சமூகத்தின் பதைபதைப்பை அருமையானதொரு கவிதையாக அமைத்துத் தருகிறார் - கவிஞர். 'வான் முகிலே, ஏன் அழுதாய்?' என்று தொடங்குகிறது - அந்தப் பாட்டு.

''செந்தமிழர் ஈழத்தின் திருவை எல்லாம்
தீயிட்டார்; திருடி அவர் பறித்துச் சென்றார்.
வெந்த புண்ணில் மேன்மேலும் வேலைப் பாய்ச்சி
வேதனையைத் தரும் வெறியர் செயலைக் கண்டா,
சந்தமிகு தமிழீழ மண்ணை மீட்கச்
சந்தனமாய்த் தேய்கின்ற மாவீரர் தம்
விந்தை மிகு தற்கொடையால் மனசு நொந்தா,
விண்முகிலே, அழுகின்றாய்? விளக்கம் சொல்வாய்.''

இயல்பாகவே நீர் துளிக்கும் விண்முகிலை விளித்து, தம் மனத்தில் எழும் ஓர் எண்ணக் குறிப்பை அதன்மேல் ஏற்றுகிறார்.

முகிலுக்கு ஒரு மனசு இருப்பதுபோலப் பாவனை செய்கிறார். மழை நீர்த்துளியை, முகிலின் மனநோவினால் ஏற்படும் விழி நீர்த் துளியாக்கிக் காட்டுகிறார். ஒரு முழுச் சமூகத்தின் துன்பச் சூழ்வையுமே முகிலோடு பேசும் முறையினைக் கையாண்டு புலப் படுத்த எண்ணுகிறார்.

மேற்படி பாட்டில் வரும் 'தற்கொடை' என்னும் சொற்சேர்க்கை முக்கியமானது. தாய் ஈழம் வாழ என்று தம்மையே தந்துள்ள தனிப்பெரு மறவர்களின் ஒப்பற்ற வண்மைத் திறத்தை உருட்டித் திரட்டி 'இந்தா!' என்று வழங்கிவிடும் அந்தச் சொல்லின் நயமும் தகுதிப்பாடும் விதந்து கூறத்தக்கவை. எல்லா விதத்திலும் இயைந்து பொருந்தும் அந்த அருமந்த சேர்மானம், இக்கவிஞர் மொழியாற் றலின் நாடித்துடிப்புப்பற்றிய பாடங்கள் எல்லாவற்றையும் கரைத் துக் குடித்திருக்கிறார் என்பதைக் காட்டிநிற்கிறது.

மேலோட்டமாகப் பழமையை நினைவுகூரும் இனமேன்மைப் பெருமிதமாக அன்றி, உயிர்ப்புடன் நிமிரும் உரிமை வேட்கையின் பணிப்பெண் போல அமைந்த மொழிப்பற்று, இக்கவிஞரின் கலை யாக்க முனைப்பின் உயிர்நிலையாய் உள்ளது. இப்பொழுது வெளி யாவன, இவர் அண்மையில் இயற்றிய ஆக்கங்கள் மட்டுமே. இவ ருடைய முன்னைய கவிதைகளும் நூலுருப் பெறுதல் வேண்டும். இனி எழுதவுள்ளவையும் சிறந்த முறையில் வெளிவந்து நமது கலை வளத்தைச் செழிப்பாக்க வேண்டும்.

நீர்வேலி தெற்கு, இ. முருகையன்
நீர்வேலி,
11.08.1993 -

# பாடித் தீர்ப்பேன்!

விடுதலையை விளைவிக்கக் கவிதை என்னும்
விதையூன்றும் எனைத் தீயர் கோபம் கொண்டு
படுகொலையே செய்திடலாம்! அதற்காய் அஞ்சிப்
பாடாமல் விடுவேனோ? தமிழை அள்ளிச்
சுடலையில் புதைப்பதற்கா! உதிரம் சிந்தி
சுதந்திரப் போர் செய்கின்றார் இளைய வீரர்?
புடம் போட்ட புதுத்தங்கம் புலிகள் கூட்டம்
புகழ்ந்தவரைப் பாடாமல் போவேனா நான்?

மண்மீட்புப் போரினிலே உயிரை ஈந்து
மாவீரர் ஆகிவிட்ட மறவர், எங்கள்
கண்மணிகள் தமைக்கவிதை செய்வதற்காய்
கத்தியினாற் பகைவரெனை வெட்டினாலும்
புண்ணின்று பீறிட்டுப் பாயும் ரத்தம்
புதிதாக ஒருகவிதை பாடித் தீர்க்கும்!
கண்மூடி மண்ணுக்குட் புதையு மட்டும்
கவிதையிலே புலிவீரர் புகழைச் சொல்வேன்!

அழகுடலம் சிதறிடினும் அன்னை மண்ணில்
அந்நியர்கள் கால்பதிக்க விட்டிடாமல்
முழுமுச்சாய் எல்லையிலே நின்று நித்தம்
முனைப்போடு சமராடும் வீரர் தம்மை
பழகுமுயிர்த் தமிழெடுத்துப் பாட அஞ்சும்
பாவலர்கள் வெறுங்கழுதைக் கூட்டம் என்பேன்!
அழியாத மாவீரர் புகழைப் பாடும்
அரும் பேறை விடுவேனோ? பாடித்தீர்ப்பேன்!

பாலமுத வாயாலே கொள்கை காக்க
படக்கென்று ''குப்பி''யினைக் கடித்தும், மாற்றான்
காலமழை போற் பொழியும் குண்டு பட்டும்
கரும்புலியாய்ப் பாய்ந்தழித்துத் துண்டு பட்டும்
கோலமுறு தமிழீழ மீட்பில் தம்மைக்
கொடுத்திட்ட மாவீரர் கொடையின் பேறு
ஞாலமதில் நிலைத்திடவே பாடி அஃதால்
நானழிய நேர்ந்தாலும் மகிழ்ந்து சாவேன்!

★ ★ ★

# நிமிர்வு!

ஈழமெங்கணும் எரிதழல் நாக்குகள்! – அவற்றை
எதிர்த்திடும் எங்களின் புலிகளின் தாக்குதல்!
சூழும் நெருப்பதன் சுடரினை விழுங்குதல்
சுகமெனக் கண்டவர் எங்ஙனம் தூங்குவர்?

தென்தமிழீழத் தெருக்களில் செந்நீர்!
தேன் தமிழ் மக்களின் விழிகளிற் கண்ணீர்!
சன்னம் துளைத்த சல்லடை மேனிகள்
சாயும் நிலத்தினில் நாணலும் நிமிரும்!

திருமலை மண்ணைத் தினந்தொறும் அரித்துத்
தின்னத் துடிக்கும் சிங்களச் செருக்கரை
எரிமலைப் பிழம்பின் இனிய செந்நா
எரித்துச் சுவைக்கும்! எவர் தடுத்தாள்வர்?

மட்டக்களப்பின் வாவிநீர் சிவப்பாய்
மாறிய கொடுமை எப்படி மறப்பாய்?
நட்டமறியா விளை வயல் வரம்பதும்
நரம்புகள் புடைக்க எழும்பித் தடுக்கும்!

அம்பா றைப்பதி நெற்கதி ரிடையே
அம்புகள் காய்க்கும் "அவர்களை" மாய்க்கும்!
வம்பாய்ச் சண்டை வளர்த்த எதிரி தன்
வாலை இழப்பான்! வையமும் ஏற்கும்

வன்னிக்காட்டின் ஓதிய மரங்களும்
வரும்பகை முடிக்க புதிய உரம் பெறும்!
சின்னப்பாலைக் கன்றுகள் கூட
சிலிர்த்து ''ரவை'' யாய்க் காய்த்துக் குலுங்கும்!

மன்னார்க் கடலில் நீந்தும் மீன்கள்
வாவென எதிரியை வாலைச் சுழற்றும்!
முன்னே நெருங்க முயலும் எதிரியின்
முகத்திலறையும் முதுகிலும் சாத்தும்!

★ ★ ★

# தமிழே! சபதம்!

அழகே! அமுகே! அறிவே! தமிழே!
நிலவே சுடரே! நீ எமதுயிரே
ஒளிர்வாய் மிளிர்வாய் உயர்சுவை தருவாய்!
எழிலாய்! உனையாம் இருளிடை விடவோ?

குறளாய் நெறியாய் குளிர்சிலம் பொலியாய்
குன்றாச் சுவைசேர் கம்பன் கவியாய்
செறிவாய் உலகில் திகழ்ந்தாய் இனிதாய்
திருவே! தேய்ந்தின் றழயாம் விடவோ?

பாகாய்க் கரும்பாய் பாவின் வடிவாய்
பண்பாலுயர் தேன் தமிழ்நீ ஒளிர்ந்தாய்!
வாகாய்! வனிதாய் வளையா பதியாய்!
வாழ்ந்தாய் உனையாம் வருந்திட விடவோ?

ஆலாய் விரிந்தாய் அரசாண்டிருந்தாய்
ஔவை செய்தருள் செவ்வைக் கவியாய்
''நாலாய்'' ''இரண்டாய்'' நாலாயிரமாய்
நலமோ டொளிர்ந்தாய் நலிந்தழ விடவோ?

சங்கப் புலவோர் செங்கோல் ஆனாய்!
மங்காப் புறநா நூறாய் மலர்ந்தாய்
மங்காய் எமதாருயிர்த்தாய் உனக்காய்
மகிழ்வாய்! உயிர்நாம் விடவும் துணிந்தோம்!

தங்கத் தமிழீ ழந்தனில் நீயும்
தனி மாமுடி பூண்டரசாண் டொளிர
பொங்கிப் புலியாய் எழுந்தோம் வெல்வோம்
பொன்னே! மணியே! தமிழே சபதம்!

# எங்கள் தாயகம்!

எங்கள் தாயகம்! எங்கள் தாயகம்!
இனிய தமிழீழம்!
பொங்கு மாமறப் புலிகளினாலது
பூத்து மணம் வீசும்!

அந்நிய சிங்கள ஆதிக்க வன்படை
அழித்திட முயன்றாலும் – புலிகள்
சிந்திய குருதிச் சேற்றில் அம்மலர்
சிரித்து மகிழ்ந்தாடும்!

ஆயிரமாயிரம் புலிகள் மலரதன்
வேருக்கு உரமானார் – கவிஞர்
பாயிரம் பாடிப் புகழும் காவியப்
பண்ணிசை அவரானார்!

சுதந்திர வேள்வித் தீயிடைப் புலிகள்
சுடர்விட்டெரிகின்றார் – வையம்
விதந்து புகழ்ந்து வியந்து மகிழ்ந்திட
விண்ணிடை ஒளிர்கின்றார்!

எங்கள் தாயகம்! எங்கள் தாயகம்!
இனிய தமிழீழம்!
பொங்கு மாமறப் புலிகளினாலது
பூத்து மணம் வீசும்

# உறுதி

எங்கள் தமிழீழ மண்ணை மிதித்திட
எவனையும் நாங்கள் அனுமதியோம்!
1. தங்கத் தமிழீழத் தாயகம் மீட்டிடத்
தாகமுற்றவர் தாமதியோம்!

கொள்ளையிட்டவன் குதூ கலமாய் மெத்தக்
கூவிக்களித்தது அக்காலம்!
2. உள்ளே வரக் காலை மெள்ளப் பதித்ததும்
''ஓ''வென் றலறுதல் இக்காலம்!

சீனாவின் பீரங்கி வண்டியும் மற்றதும்
சிதறும் எங்களின் வெடி குண்டால்
3. தானாக வந்திங்கு சாவதற் கிட்டமோ?
சத்தியம் தொல்லைக்கு முடிவுண்டாம்!

நாளுக்கு நாளாக நரியெனத் தந்திரம்
நாற்பது பண்ணியும் தோற்கிறாய்!
4. மீளத்துடிக்கு மெம் தாயகம் நிச்சயம்
மீள்வதையே தினம் பார்க்கிறாய்!

ஆயிரமாயிர மாகவே வந்திங்கு
ஆட்டிப் படைத்திட எண்ணமோ?
5. வா! இனி உங்களின் வாலை நறுக்கியே
வரலாறு படைப்பது திண்ணமே!

ஈழநாதம்
*13 - 11 - 1992*

# புதுவிதி!

சோதனை ஆயிரம் குழினும் – எங்களின்
சுதந்திர தாகமோ மங்கிடும்?
வேதனை மேற் பல வேதனை எய்தினும்
வீறு கொண்டே புலி பொங்கிடும்!

சீனத்திலே செய்த விமானங்கள் வானத்தில்
சீறினுமெம் நெஞ்சோ தளர்வுறும்?
மானத்தை யேபெரி தாகநாம் கொண்டவர்
மாற்றாரின் கோட்டையே அழிவுறும்!

பீரங்கிப் படையணி பெரிதென மொய்க்கினும்
பிசகிநாம் ஓரணு சோர்வமோ?
வீரங்கொண்டே எழுந்தாடிடும் வேங்கையால்
வீணரின் உடல் வெந்து நாறுமே!

எறிகணை குண்டுகள் ஏவியே தாக்கினும்
ஈழவர் நாங்களோ அஞ்சுவம்?
முறித்துமே எதிரிதன் முதுகெலும் பற்றேங்கி
முனகிட வெற்றியைக் கொஞ்சுவோம்

வையகம் முற்றுமே வாழ்த்திப் புகழ்ந்திடும்
மாமற வேங்கை எம் தளபதி!
ஐயமே இல்லை எம் அன்னை தமிழீழம்
ஆளுவோம் இதுவேதான் புதுவிதி!

ஈழநாதம்

# நெஞ்சம் எதிர் கொள்ளும் நிமிர்ந்து!

“புக்காரா” வந்திங்கு பொல்லாத குண்டுமழை
நிற்காமலே நித்தம் பெய்திடினும் எக்காலும்
அஞ்சும் மனதறியா ஆண்மைப் புலிவீரர்
நெஞ்சம் எதிர்கொள்ளும் நிமிர்ந்து!

“பாரக்கெலி” யோடு பறந்தெங்கள் வான்பரப்பில்!
போருக்கு வந்து பொழிந்தாலும் - நேருக்கு
நின்று போராடும் நிகரில்லாப் புலிவீரர்
வென்று கதைமுடிப்பர் விரைந்து!

மண்ணெண்ணெய் பெற்றோல் மா, சீனி மருந்தென்று
எண்ணிக்கை இல்லாப் பொருள்தடுத்தும் - மண்மீது
மாறாத பற்றுடைய மறவர் தமிழ்மக்கள்
சீறாம லோவிட்டார் சினந்து?

“சீனத்துச் சகடை” சிறுபொம்மர் கெலியெங்கள்
வானத்தில் சுட்டு வீழ்த்தியவர் - மானத்தை
உயிரின் மேலாய் உளத்தில் பதித்துள்ள
புயலாம் புலிவீரர் சிறப்பு

வையப் படை முழுதும் வாரித் திரண்டெம்மை
நையப் புடைக்க நகர்ந்தாலும் - ஐயமின்றி
நெஞ்சத் துணிவோடு நேர்நின் றெதிர்த்(து) அவர்கள்
அஞ்சும் வகைசெய்வோம் அடித்து.

# தருணமிது! தலைதூக்கு! தழைப்பாய்!

ஆதிக்க இருள்கலைந்து ! அடிமைப் பூட்டு
அடியோடு தகர்ந்துடையும் ஒலியைக் கேட்டு
நீதிக்கு அரங்கமைத்து நிலம்வாழ் மக்கள்
நிம்மதிக்கு வழிசமைத்து ! நெஞ்சத் துக்கம்
வீசுற்றுப் போயொழிந்து ! வீதி எங்கும்
விடியல் தரும் நறுங்கானம் விளம்பி மக்கள்
வாசஞ் செய் துய்கின்ற வசந்த காலம்
வருகிறது! கவலைவிடு! விழித்துக் கொள்வாய்

தமிழீழ மண்ணெங்கும் சொரிந்த ரத்த –
தானத்தின் ஈரத்தில் மலர்கள் பூத்து
சுமையான துயரங்கள்! தொல்லை நீங்கி
சுகமான நல்வாழ்வு செழித்து ஓங்கி
எமையெண்ணி எழுகின்ற பொறாமைத் தீயில்
எதிரிமனம் சூடுபட்டு எரிந்து சாய
தமிழீழம் மலர்கிறது தரணி மெச்ச
தலைவன் போல் தலை தூக்கி நிமிர்ந்து நிற்பாய்!

திருக்கோண மாமலையிற் புலியின் சின்னம்
சிரித்தபடி கொடியோடு அசைந்து ஆட!
செருக்கோடு தேன் நாட்டின் வாவி மீன்கள்
செந்தமிழில் நறுங்கானம் இசைந்து பாட

கருக்கொள்ளும் இலக்கியங்கள் மண்ணை மீட்ட
காவிய மாவீரர்களின் கதையைக் கூற
பொருத்தமென வையத்தார் புகழ்ந்து ஏற்றப்
புலர்கிறது தமிழீழம் புரிந்து கொள்வாய்!

வன்னியொடு மன்னாரில் ''வரட்சி'' நீங்கி
வளம் பொங்கி மகிழ்ச்சியினால் மனது வீங்கி
மன்னவனாம் சங்கிலியன் ஆண்ட யாழ் மண்
வரலாற்றில் புதுப் பொலிவு பொங்கிப்பாய
கன்னல் பிழி சாறெனவே கவிதை, கானம்
கலைவடிவம் பல வளர்ந்து தெருக்கள் – தோறும்
மின்னலிட, மிகவொலிக்க, வீரம் பொங்க
மீள்கிறது தமிழீழம்! வீறு கொள்வாய்!

அடிமையென! அகதியென! அகிலந்தோறும்
அல்லலுறும் நிலையொழிந்து உரிமை பெற்று
மிடிமையறுந் தொளிபுரள மேன்மை ஓங்க! –ஆறு
மிதமிஞ்சிக் கல்வியொடு செல்வம் பொங்க
குடியரசாய் மக்களெல்லாம் குலவிவாழ
கொஞ்சுதமிழ் விஞ்சியுயர் பண்பாடுய்ய
விடுதலையாம் சுகந்தத்தின் இன்பம் துய்க்கும்
வேளையிது தமிழினமே! வேங்கையாவாய்.

* * *

# ஈழமண்ணின் வீரப் பெண்கள்

கொஞ்சு மொழி பேசும் கிளி
கோதையர்கள் பாயும் புலி
நெஞ்சிலுரம் கொண்ட தமிழ்
ஈழமண்ணின் வீரப் பெண்கள்!

முல்லை மலர் அவர் சிரிப்பு – பகை
மோதுகையில் முழு நெருப்பு
இல்லை இனித் தொல்லை – தமிழ்
ஈழம் புது வாழ்வு பெறும்!

வேகம் கொண்டு அவரெழுந்தார்
வெற்றி பல தினம் கொணர்ந்தார்
தேகம் பொடி யாய் வீழினும்
தீரமுடன் சமர் புரிவார்

பண்டைத் தமிழ் வரலாறும்
பார்த் தறியாப் பெரு வீரம்
கொண்ட தமிழ் ஈழப் பெண்கள்
கொள்கை ஒளிர் மாணிக்கங்கள்!

* * *

# பெண்மையைப் போற்றிடுவோம்!

கண்ணை இழந்தவர் போல வையகம்
கதறி அழ நேரும் – தூய
பெண்மை துயரினில் வாடும் நிலையினை
மாற்றல் கடனாகும்.

தாயின் கருவறை தன்னில் விளைந்திடாத்
தனையர்கள் யாரும் உண்டோ? – கொடுந்
தீயின் நடுவினில் தாயை நிறுத்திடும்
தீயவர் மானிட ரோ?

மண்ணின் மாதவம் மங்கையர் தாமென
மறைகளும் எடுத் தோதும் – பாரில்
பெண்ணை அடிமைக ளாக்கி வைத்திடில்
பேரிடர் தாம் சூழும்.

மூடக் கொள்கை கொண்டு பெண்மையை
முடக்குதல் பெருங் கொடுமை – ஒரு
கோடிப் பெருமைகள் கொண்ட மாதரைப்
போற்றுதல் நம் கடமை.

ஆணுக்குப் பெண்மை அனைத்திலும் – சமமென
அனைவரும் ஏற்றிடுவோம்! – நலம்
காண உலகினில் பெண்மையைப் பேறெனக்
கனிவுடன் போற்றிடுவோம்.

# விடியலை நாடும் தமிழகத்தில்

குண்டு விழுந்திடும் குடிசை எரிந்திடும்
குடும்பம் சிதறி விடும் – துயர்
கண்டு அழுதிடும் தன்மை மறைந்து கண்
கனலை உமிழ்ந் தொளிரும்.

வாடும் மழலையர் வயிறு கொதித்தழும்
வாட்டம் போக்கிடவே! – அலை
ஆடும் கடலிடை ஓடம் செலுத்திடும்
" அவனை " "நேவி " சுடும்.

வீடு இழந்தவர் வீதி மருங்கினில்
வாடும் நிலை தெரியும் – கெலிச்
சூடு விழுந்ததில் சுருண்டு மடிவுறும்
துயரில் நெஞ்செரியும்.

ஊசி மருந்தோடு உணவு எரிபொருள்
ஒன்றும் கிடையாது – தினம்
நாசமாய் உயிர் போகும், விசருடன்
நாயும் கடித் தோடும்.

பசளை வகையின்றிப் பயிர்கள் சிதைவுறும்
பஞ்சம் மிக மலியும் – நடு
நிசியில் எறிகணை உயிரை எடுத்திடும்
நிதமும் இது நடக்கும்.

சுற்றி வளைப்பென அற்பர் படையணி
சூறை யாட வரும் – மகளிர்
கற்பை யழிப்பதும் கழுத்தையறுப்பதும்
கடமை எனப் புரியும்.

புலிகள் அதிரடி கொடுத்து நித்தமும்
புலையர் தலை அறுக்கும் – தமிழர்
வலிமை தற்கொடை வானை இடித்திடும்
வாழ்வு விடிவு பெறும் – நாளை
வாழ்வு விடிவு பெறும்.

★ ★ ★

# மாவீரர் தாகம் தீர்ப்போம்

புதியபுற நானூற்றின் வரிகள் பாடிப்
புலவர் மனம் குதூ கலிக்க, வேங்கையாகி
எதிரிகளை முறியடிக்கக் களத்தில் பாய்ந்த
இளந்தமிழர் வரலாற்றில் மா வீரரானார்!

தாயோடு தந்தையினை உடன்பிறப்பைத்
தான் பிரிந்து, தாய் மண்ணைக் காதலித்தார்
காயாகிக் கனியாகு முன்னர் பிஞ்சாய்க்
களஞ்சென்று உதிர்ந்தாலும் விதையானார்கள்.

பூவென்று வர்ணித்த பெண்கள் ஈழப்
புரட்சிப் போர் வரலாற்றில் புலியானார்கள்
'ஆ' வென்று வாய்பிளந்தான்! எதிரி எங்கள்
அரிவையரின் போர்த்திறனால்! அதிர்ச்சியுற்றான்.

கோட்டையொடு கொக்காவில் மாங்குளத்தில்
கொடியேற்றி வான் புகழைத் தொட்டு நின்றார்!
வேட்டையிடு வேனென்று விரைந்து வந்த
வெறியர்கள் ஓட்டமிட அடிகொடுத்தார்!

ஆனையிறவு வெளியில்! மரபுப் போரால்
அகிலமதும் வியந்துபட வீரம் செய்தார்!
சேனை பல ஆயிரமாய்க் கொண்டு வந்த
சிங்களவர் புதுப்பாடம் படிக்க வைத்தார்!

மண்மீட்கத் தமதுயிரை அர்ப்பணித்த
மாவீரர் புகழ்பாடி நன்றி செய்வோம்!
கண்மணிகள்! அவர் நெஞ்சத் தாகம் தீரக்
கனிவோடு தமிழீழம் மீட்போம் வாரீர்!

# உயிர் மூச்சு!

**நா**டு இனம் மொழி எங்களுயிர் மூச்சடா!
நாளை விடியல் நமது என்ப துண்மையான பேச்சடா!
கூடு கட்டத் துணிந்த குயிற்கூட்டம் நாங்கள் கூவுவோம் உயர்
கொள்கையோடு எதிரிகள் மேல் வேங்கையாகித் தாவுவோம்.

எங்கள் தலைவன் ஆணையிட்டால்
இமய மலையும் தூசு தான்!
சிங்களத்துப் படைஞர் கூட்டம்
சிறிய வெள்ளை ஆடுதான்!
வங்கம் தொட்ட கடலைக்கூட
உள்ளங்கையில் அள்ளுவோம்
எங்கள் தமிழ் ஈழ நாட்டை
இனிதாய் நாளை வெல்லுவோம்!

அடிமை என்ற சொல்லை முற்றாய்
அர்த்த மற்ற தாக்கு வோம்!
விடிவை எட்டிக் கொள்ளுமட்டும்
வேறு பற்று நீக்குவோம்
குடியரசு நாடு தமிழ் —
ஈழமென்று சாற்றுவோம்! — புலிக்
கொடியை ஐ. நா. அரங்கிலேற்றிப்
புகழை நிலை நாட்டுவோம்!

தரணி மெச்சும் தமிழெடுத்துப்
பரணி மெத்தப் பாடுவோம்!
உரமிகுந்த உளத்தில் தூய
உணர்வை அள்ளிச் சூடுவோம்!
சிரநிமிர்ந்து தமிழீழ மாந்தர்
செகத்தில் வாழப் பண்ணுவோம்!
செகத்தில் வாழப் பண்ணுவோம்.

★ ★ ★

# உறுதி மொழி

தமிழர் மானம் பெரிது பெரிது – உயர்
தமிழின் சுவையோ; அரிது; அரிது;
தமிழர் மானம் பெரிது; பெரிது – உயர்
தமிழின் சுவையோ அரிது; அரிது!

இமயம் அறியா உறுதி; உறுதி; – எங்கள்
இதயம் முழுதும் ஒரு தீ; ஒரு தீ; – அது
விடுதலை உணர் வெனும் பரிதி; பரிதி;
விடுதலை உணர் வெனும் பரிதி; பரிதி!

சிங்களப் படையை எரிப்போம்; எரிப்போம்; – தூய
செந்தமிழீழம் வரிப்போம்; வரிப்போம்;
பொங்கும் புலியாய்க் குதிப்போம்; குதிப்போம்
போரில் எதிரியை மிதிப்போம்; மிதிப்போம்!

எங்கள் தாய்த்தமிழ் ஈழம் ஈழம் நெஞ்சில்
இருக்குது எம்மிடம் வீரம்; வீரம்;
மங்கிய உரிமை பெறுவோம்; பெறுவோம்;
மாற்றார் படையைச் சுடுவோம்; சுடுவோம்;
நாங்கள் விடுதலைப் புலிகள்; புலிகள்; – எதிரி
நமக்கு முன் சிறு எலிகள்; எலிகள்;
நீங்கும் நாளை துயரம்; துயரம்;
நிச்சயம் புலிக்கொடி உயரும்; உயரும்!

பிரபாகரனெம் தலைவன்; தலைவன்; – வீரப்
பிரபாகரனெம் தலைவன்; தலைவன்;
அணியாய் அவன்பின் செல்வோம்; செல்வோம் – நாளை
அழகாய்ஈழம் வெல்வோம்; வெல்வோம்!

# கோணநாடு!

இராவணன் ஆண்ட இன்பபூமி – தமிழ்
ஈழத் தலைநகர் கோணநாடு!
அருளும் இறைவன் கோணேசர்
அமர்ந்த திருமலை புகழ் பாடு!

ஞான சம்பந்தன் தேவாரம் – அங்கு
நாளும் ஒலித்து அலையாடும்:
வானின் நிலவும் விண் மீனும்
வழங்கும் ஒளியில் எழில் கூடும்

இயற்கை அழகுத் துறைமுகமும் – செவி
இனிக்கும் தமிழர் மொழி வளமும்:
வியக்கும் வெந்நீர் ஏழ் கிணறும்
விளங்கும் கோணமலை நாடு!

செந்நெல் விளையும் மூதூரும் – வளம்
செறிந்த திரியாய் நிலாவெளியும்
கந்தளாய் தம் பலகாமம் – தேன்
கரும்பாய் இனிக்கும் சுவைநாடு!

காற்றாய் விரைந்து பட கோடும் – கடற்
கரையில் வந்தே மீன் சேரும்!
போற்றும் சுவை சேர் பால் தயிரும்
பொலிவாய்த் திகழும் திருநாடு!

வீரம் கல்வி செல்வ மொடு – மணம்
வீசும் உயர்ந்த பண்பாடும்
சேரும் கலைகள் கவி வளரும் – நலம்
திகழும் நாடு திருமலை மண்

# மகிழ்வு சூழ்ந்தது!

எங்கள் புலிப்படை வீரர் கையிலே
எதிரிப் படை முகாம் வீழ்ந்தது;
தங்கத் தமிழீழ மக்கள் நெஞ்சிலே
ததும்பி மகிழ்வலை சூழ்ந்தது!

மலருந் தமிழீழ வீர வரலாற்றின்
வரிகள் இக்கதை கூறும்; – நாளை
புலரும் பொழுதிலே எங்கள் புலிக்கொடி
வானின் முதுகிலே ஏறும்!

சொந்த மண்ணிலே எதிரி படையுடன்
வந்து எப்படிக் கிடப்பான்; – எரி
பந்தமாய் விழி கொண்டு புலிப்படை
பாய எல்லையைக் கடப்பான்!

நெஞ்சிலுரமுடன் நிற்கு மெங்களின்
நிமிர்ந்த புலிப்படை வெல்லும் – கொடு
நஞ்சை யொத்த சிங்களவர் படைகளை
நாசம் பண்ணியே கொல்லும்!

இனிய வீரரின் குருதி பட்டவெம்
புனித மண்ணை யார் மிதிப்பான் – பெருந்
துணிவு கொண்ட தோர் தலைவன் புலிப்படை
துரத்தி எதிரியை அடிப்பார்.

# கொடுஞ் செயல் தவிர்த்துக் கொள்வீர்!

மண்ணை அபகரிக்க வென்று
மாற்றானின் படைகள் இங்கு
கண்ணொடு கருத்தும் கொண்டு
கடலெனத் திரளும் வேளை
மண்ணெண் ணெய் பதுக்கி நீயும்
மக்களை வதைத்து வாழும்
எண்ணமே கொண்டு நின்றால்
இரும்புதான் உனது நெஞ்சம்!

களத்திலே மகனை விட்டுக்
கடுஞ்சமர் நடக்கும் வேளை!
உளத்திலே துயரங் கொண்டு
உருகிடுவோரை வாட்டி
வளத்தினைப் பெருக்கி வாழ
வஞ்சனை செய்ய லாமோ
குலத்தினுக் கீனம்; உங்கள்
கொடுஞ் செயல் தவிர்த்துக் கொள்வீர்!

எறிகணை தன்னை ஏவி
எதிரிகள் சாடும் வேளை!
முறிபடும் மக்கள் செய்யும்
முனகலைச் சாவைக்கண்டும்

சிறிதுமே இரக்கம் இன்றி - (பணம்)
சேர்த்திடும் ஆசை கொண்டு
குழியிலே பொருள் பதுக்கும்
கொடுஞ்செயல் தவிர்த்துக் கொள்வீர்!

விசும்பினில் இரையும் "பொம்மர்"
வீசிடும் குண்டு பட்டு
பொசுங்கியே மக்கள் நாளும்
புழுவெனத் துடித்தல் கண்டும்
கசிந்திடா இதயத் தோடு
கடைப் பொருள் பதுக்கிக் காசு
கறந்திடும், இழிவை விட்டு
கண் திறந்தே நீ, வாழ்!

★ ★ ★

# புலிகளால் இனிமை பூக்கும்!

எங்கள் தாயகத்தில் என்றோ
இருந்த தாம் இனிய நாட்கள்!
மங்கியே அவைகளின்று
மறைந்திடத், துயரம் மட்டும்!
பொங்கியே வளர்ந்து மேவி
பொசுக்கிடும் நெருப்பதாகி
எங்கணும் அழுகை ஓலம்
இறப்பொடு இழப்புக் கோடி!

திருவிழாக் கோலமில்லை
தீந்தமிழ் ஓசையில்லை!
விருப்புடன் கல்வி கற்கும்
"விடலைகள்" தொகையுமில்லை!
பெருமை கொள் அறிஞருக்கும்
பீடில்லைப் பெருமை யில்லை!
கரும்புகை மூட்டம் திக்கு
கண்டிட வொண்ணா வாழ்க்கை!

மங்கையர் நுதலிற் பொட்டு
மறைந்தன கழுத்துத் தாலி
தங்கவே யில்லை! எங்கள்
தாயகம் விதவைக் கோலம்!

பொங்கல் புத் தாண்டு மற்றும்
புனித நாள் பூப்பதில்லை!
பொங்குமே பொங்கு மெங்கள்
பொன்மனம் ஒன்றே நித்தம்!

இனிய நாட் கதைகள் கேட்டு
ஏங்கிடும் எமக்கு முன்னே
மனிதரின் உடலை நாய்கள்
மணவிழா விருந்தாயுண்ணும்!
புனிதமார் ஆலயங்கள்
பொடிபடும் குண்டு வீச்சால்
சனியனாய்த் துரோகக் கும்பல்
சதி செய்யும் எதிரியோடே!

சுதந்திரம் என்ற சொல்லைச்
சொல்லவும் உரிமையில்லை!
நிதம் வதை பட்டு மாயும்
நிலை யெமக் குரிய சொத்து
அதம்பல செய்து எம்மை
அழிப்பதே அரச நீதி
சிதைவுறும் நெஞ்சம்தேறிச்
சிரிக்கும் நாள் கனவு தானோ?

" இரும்பினால் செய்த பொல்லா
இராட்சதக் கழுகு " வானில்
இரைந்துமே குண்டை அள்ளி
இரக்கமே அற்று வீசும்
சரிந்திடும் தமிழர் வீடு
தலைபல சிதறி ஓடும்!
கரைந்த எம் இனிய நாட்கள்
கனிவுடன் தழைப்ப தென்றோ?

நெஞ்சினில் விடுதலைப் பொன்
    நெருப்பினை ஏந்திக் கண்கள்
துஞ்சவும் மறந்து நாளும்
    துணிவுடன் களத்தில் வீர
வெஞ்சமர் புரியு மெங்கள்
    வேங்கைகள் சொரியும் ரத்தம்
விஞ்சிய துயரைப் போக்கி
    விடிவினைப் பூக்க வைக்கும்!

உலகெலாம் அகதியாகி
    உதைபடும் தமிழர் வாழ்க்கை
பலிக்கடா மந்தை யாகிப்
    பதைத்துமே நலியும் வாழ்க்கை
அலியெனும் நிலை யொழிந்தே
    அனைவரும் புலிகளென்றே
பொலிவு பெற்றுய்ய, மீண்டும்
    பூத்திடும் இனிய நாட்கள்!

★ ★ ★

# நாளை

ஈழத் தலை நகர் எங்கள் திருமலை
ஈனருக்(கு) இங்கென்ன வேலை?
சூழக் கிடந்தெமைச் சுட்டுப் பொசுக்கினும்
சோர்வமோ? நறுக்குவோம் வாலை!

"பிரெடறிக் கோட்டை" யுள் பேய்களின் ஆட்சியோ
பிடரி முறிபடும் நம்பு
இரைகடல் ஆர்ப்ப எங்கள் புலிக்கொடி
ஏறித் தொடும் நாளை விசும்பு!

கோணேசராலயக் கொடியிற் குதூகலம்
கொஞ்ச, திருவிழா நடக்கும்!
ஆணவத் தோடங்கு அலையும் சிங்களம்
அத்தனையும் எல்லை கடக்கும்!

மூதூர் கிளிவெட்டி சம்பூர் வெருகலை
மூடும் பகையிருள் கலையும்!
நீதி மலிந்தங்கு நிம்மதி யோங்கிட
நெல்லினம் கழனியில் விளையும்!

கட்டைபறிச்சான், சேனையூர் ஆலங்
கேணியில் எம்மினம் வாழும்!
சுட்டுக் கொளுத்திய சோலைகள் யாவுமே
சுகமுடனே தழைத் தோங்கும்!

வாகரை மட்டக்களப்பென்று பற்பல
வாகனம் சுமை கொண்டு ஓடும்!
வேகும் நிலையினி இல்லையென்றே மக்கள்
விடுதலைச் சிந்துகள் பாடும்!

சூரன் கல் கண்டல் காடும் தரவையும்
சீதன வெளியும் சிரிக்கும்!
ஈரம் செறிந்த கங்கைக் கரைகளில்
இன்னறும் பாலை ''ஆ'' சுரக்கும்!

அல்லை, தம்பல காமத்தை அண்டிய
அத்தனை தொல்லையும் மறையும்!
சொல்லரும் கன்னியா பன்குள மக்களின்
துயரம் போய்ச் சுகம்பல நிறையும்!

அநுராத புரச்சந்தி பாலையூற் றெங்கணும்
ஆனந்த நன்நிலை தோன்றும்!
இனிப்பய மேதென மணிக்கூண்டு வீதியில்
எம்மினம் கால்களை ஊன்றும்!

அன்புவழி செல்வ நாயக புரங்களில்
அச்சமற்று மகிழ் வொலிக்கும்!
இன்ப முடனுப்பு வெளியில் எம்மவர்
இரைவர்! வாழ்க்கை சொலிக்கும்!

சல்லி சாம்பல் தீவும் இலுப்பைக்
குளமும், குதூகலம் கொள்ளும்!
அல்லல் அகன்றதாய் ஆத்தி மோட்டையும்
ஆறாங் கட்டையுந் துள்ளும்!

நிலாவெளி யூரினில் நெல், உப்பு, புகையிலை
நிறைவொடு பயிர்வளம் கொழிக்கும்!
குலவு தமிழினம் கோபால புரததிலும்
குறைவற வாழ்ந்து செழிக்கும்!

கும்புறுப் பிட்டியில் குச்ச வெளியினில்
குதூ கலமாய்த் தமிழ் ஓங்கும்!
நம்பிக்கை! கல்லம் பற்றை திரியாயில்
நம்மவர் துயரங்கள் நீங்கும்!

புல் மோட்டை தென்னை மரவடி யாவிலும்
பூந்தமிழ்க் குடிவளம் பெருகும்!
அல்லல் தந்தேயெம்மை ஆட்டிப்படைத்திட்ட
அரக்கர் படையணி கருகும்!

திருமலை நின்று மண லாற்றின் ஊடாய் யாழ்
செல்ல நற் பாதைகள் திறக்கும்!
பிரபாகரனென்ற தலைவன் கை ஏற்றிய
புலிக்கொடி வீரமாய்ப் பறக்கும்!

★ ★ ★

# மறவர் படை வெல்லும்!

ஆயிரம் சூரியர் கண்கூசும் –
அளவிற் தியாக ஒளியுடையார்!
தாயினும் மேலாய்த் தமிழீழத்
தாயகம் மீதுயர் பற்றுடையார்!
சாயினும் உடலம் தூள்பட்டே
சாகாப் பெரும்புகழ் வடிவுடையார்
வாயினும் மனத்தும் அவர் நாமம்
வாழ்த்தி வணங்குதல் கடனாகும்!

நெஞ்சில் உறைந்த பெரு வீர
நெருப்பைச் சினத்தில் விழி கொட்டும்!
கொஞ்சும் பசிய இதழ் இடுக்கில்
"குப்பி விஷமும் தேன் சொட்டும்"
அஞ்சுதல் என்பது அறியாத
அவரின் புகழோ விண்முட்டும்!
நெஞ்சம் நிறைந்த தமிழீழம்
நிச்சயம் இவரால் தான் கிட்டும்!

வானத் தெதிரி விமானங்கள்
மழையாய்க் குண்டு பொழிந்தாலும்!
சேனை படைகள் ஆயிரமாய்ச்
சினந்தே போரிற் குதித்தாலும்!
தானமாக மாவீரர்
தலைகள் மண்ணிற் குவிந்தாலும்!
மானத் தலைவன் வழி செல்லும்
மறவர் புலிகள் படை வெல்லும்!

# புத்தாண்டுக் கோலங்கள்!

புத்தாண்டு மலர்ந்ததெனக் குதூ கலித்துப்
புன்னகைப்பூ முகம் உதிர்க்க மகிழ்ந்தகாலம்
முற்றாக மறைந்தொழிந்து முகத்திற் சோகம் –
முளை விட்டுக் கிளைவிரிப்பதிந் நாட்கோலம்!

புதுமனைக்கு மைபூசிப் புதுமையூட்டி
புத்தாடையோடு பொங்கல் வைத்த காலம்
விதிவசமாய் போயொழிந்து வீடு வாசல்
விட்டகதி யாயலைவ திந்நாட் கோலம்!

மகனுக்கும் மற்றவர்க்கும் விருந்தளித்து
மாதாக்கள் மனநிறைவு கொண்ட காலம்
புகைபோலப் போயொழிந்து மகனே யென்று
புலம்பிமிக வாடுவது இந்நாட் கோலம்!

பொன்நுதலிற் குங்குமத்தாற் பொட்டு வைத்துப்
பூச்சூடிப் புத்தாண்டில் பொலிந்த காலம்
இன்னலிடைப் போயொழிந்து, பொட்டழிந்து
இருண்ட முகம் மலிந்ததுதான் இந்நாட்கோலம்!

பன்னீரும் வாசனையும் புத்தாண்டின்பம்
பருகவரும் கிளை ஞருக்குத் தெளித்த காலம்
பனி நீராய்ப் போயொழிந்து கண்ணீர் ஓடும்
காட்சியினால் மனம்பதைத்தல் இந்நாட்கோலம்!

சிரித்துவரும் சித்திரைப் பொன் நன்நாளன்று
செம்மையுடன் மங்கலமே நிலைத்த காலம்
கரியாகிப் போயொழிந்து சாவும் போரும்
கலையாமல் வதைப்பதுதான் இந்நாட்கோலம்!

★ ★ ★

# சிரித்துவா தைப் பாவையே!

அமிழ்தான தமிழ்மாந்தர் அழகான புதுவாழ்வு
அமைத்துய்ய வழி காட்டவும்!
இமைபோல எமை நாளும் இனிதாக வே காக்கும்
இணையிலார்க் (கு) உரமூட்டவும்!
சுமையான துயரங்கள் தமைநீக்கி நலமான
சுகவாழ்வை உருவாக்கவும்!
தவமாகி நவமாகி தந்தனத் தோமென்று
தாவி வா! தைப் பாவையே!

விடுதலை நாடியும் விடிவினைத் தேடியும்
வேகுவோர் ஒளி காணவும்!
படுகொலை யாடிடும் பாதகர் படையணி
பாடையின் சுமை யாகவும்!
கொடியவர் ஆட்சியும் கொடிமுடி யாவுமோர்
குழியிலே புதைந்து விழவும்!
நெடிதுயர் வீரமும் நேர்மையும் கொண்டுமே
நிமிர்ந்து வா தைப் பாவையே!

சொந்தமண் நீங்கியே வெந்த புண் நெஞ்சொடு
சுருள்பவர் துன்ப மறவும்!
நொந்தழும் ஏழையர் வயிறெழு பசிக்கனல்
நூர்ந்தவர் இன்பம் பெறவும்!
செந்தமி ழீழத் திசைதோறும் விடுதலைச்
சிந்துகள் ஒலித்து எழவும்!
செந்நெலின் அரிசி பால் தேன் கனிப் பொங்கலாய்
சிரித்து வா! தைப்பாவையே!

# சித்திரைப் பெண்ணே

பூமலர்ந்தது போல நீயொரு புன்னகை சிந்தி எழு
பூமிஎங்கணும் இருளையழித்திடும் பொற்சுடர் போலஎழு
பாமலர்ந்திடும் வேளை கவிஞனின் மனம்போல்
தெளிவோ டெழு
பாரில் எங்கணும் பசுமையளித்திடும் மாமழை போலவிழு
பூமலர்க் கொடி போலநறுமணம் பொங்க மணங்கமழு
பொட்டு நுதலொடு பட்டு நிலவெனப் பொலிவாய்
ஒளி – உமிழ
தாம் தரிகிடத் தோம்எனநடம் நீ புரிந்துவிடு
தாய் நிலத்தினில் நாம் நிமிர்ந்திட நாள் குறித்துவிடு!

ஊர் உலகினில் போர் எனும்நிலை நீதடுத்து விடு!
ஓ! என உயிர் தானழுதிடும் துயர் அழித்துவிடு!
வேர் அறுபடும் பூமரங்களை நீ காத்து விடு
வீண் உதிர்வுகள் தான் முடித்(து) அவை மேல்
எழும்பவிடு
கூர் மதியொடு பார் முழுவதும் சீர் மலிய விடு!
கூன் முதுகுகள் தான் நிமிர்ந்திடக் கோல்கொடுத்துவிடு
நேர் வழியினில் கால் பதித்தவர் நிலை உயர்த்திவிடு!
நிலமதிர்ந்திட! நீ மகிழ்வொடு வா சித்திரையே!

தேன் எனச் சுவை நாள் முழுவதும் நீ வழங்கி விடு
தேர் அசைவெனப் பேர் எழிலுடன் நீ நடந்து விடு
நான் பெரிதெனத் தான் நினைப்பவர்க் (கு) ஓய்வளித்து
விடு

நாடழிவுறக் கோல் பிடிப்பவர் தமைத்துரத்திவிடு
வான் அதிர்ந்திடத் தேன் தமிழொலி நீ எழுப்பிவிடு
வா! வசந்தமென் றோர் அழைப்பொடு வழிதிறந்து
விடு மீன் அலையினில் தான் குதிப்பது போல் மகிழ்ச்சி
யொடு
மிடிதொலைத்திடும் நிறைவயலென நீ சிரித்
தெழுவாய்.

★ ★ ★

# சாபமிடு தமிழ்த் தாயே

தங்கத் திருமகளே! தாயே! தமிழ்மகளே!
தமிழைத் தணலாக்கிச் சாபமொன்று நீயிடுக!
வங்கக் கடல்மீது வந்த தளபதியை
வஞ்சித்த வடநாடு வளர்தீயில் எரிகவென
பொங்கும் எரிமலையின் பிழம்பாய் நின் வார்த்தை
புறப்படவே! சத்தியமாய்ப் போடம்மா பெருஞ் சாபம்!

தாழ்வுற்ற தமிழீழத் தளையறுக்கப் புறப்பட்ட
தானைத் தளபதியாம் கிட்டு எனும் மறப்புலியை
ஆழக் கடல்நடுவே! அனற்பிழம்பாய் ஆக்கி வைத்த
அலகைக் குணம்படைத்த அநியாயக் காரரெலாம்
சூழும் நெருப்பிடையே! சுடுபட்டுப் போயொழிய
சுந்தரியே! தமிழரசி நீயிடுக ஒரு சாபம்!

எமதரிய திலீபனையே இரங்காது தின்றவர்கள்
இணையற்ற தளபதிகள் குமரப்பா புலேந்தியொடு
தவமைந்தர் பன்னிருவர் சவமாக நஞ்சானோர்
சதிசெய்து ''ஜொனி'' யவனைச் சாகடித்த
அரக்கரின்று
இமைபோல எமைக்காத்த ஈரைந்து மறவர்தமை
இரை கொண்ட கொடுங் கோலர்க்(கு) இடிவிழவே
- இடுசாபம்!

பாரினிலே! தமிழீழம் இறைமையுடன் மலருவதைப்
பாவமென எண்ணுகின்ற பாவியரும் வாழுவதால்
'' பாரத உபகண்டம் பலதுண்டம் ஆவது மெய் ''
பைந்தமிழால் இடுஞ்சாபம் பலிப்பதுவோ
மெய்யிலும்மெய்
சீர்மலியுந் தமிழீழம் செகமறியத் தலை நிமிர்ந்து
சிரிப்பது மெய்! தமிழ்த்தாயே! சீற்றமுடன் சாபமிடு!

# காவியம் ஆகி நிற்போர்!

அடிமையாய் நாங்க ளிந்த
அவனியில் வாழு கின்ற
கொடுமையை அகற்ற வென்று
கொதித்திடும் மனத்தி னோடு
விடுதலை படைப்ப தென்னும்
வெறியொடு கருவி யேந்தி
படுகளம் சென்று மாற்றான்
பதைத்திட வதைத்து வென்றார்!

குருதியில் இளைய மேனி
குளித்திட நேர்ந்த போதும்!
கருதிய இலட்சியத் தைக்
கண்டிடும் உறுதியோடு
பொருதினார் இறுதி மூச்சுப்
போய் விடும் வரைக்கு மங்கே!
கருகியே அழிந்த போதும்
காவிய மாகி நின்றார்!

சிங்களர் வந்து எங்கள்
செந்தமிழ் மண்ணை ஆளும்
வெங்கொடும் துயரை மாய்க்க
வேங்கையாய்ப் பாய்ந்து சென்று
செங்களம் ஆடி வீரம்
செய்தனர் களத்தில் அந்த
மங்கிடா மணிக ளேதான்
மடிந்திடா மா வீரர்கள்!

நிச்சயம் அவர்கள் தங்க
நெஞ்சினிற் கொண்ட தாகம்
பத்திரமாக இங்கே
பலித்திடும்! பலிக்க வைப்போம்!
வித்தென ஈழ மண்ணில்
வீழ்ந்த மா வீரர் தம்மை
நித்தமும் வாழ்த்தி அன்னார்
நேர்வழி சென்று வெல்வோம்!

★ ★ ★

# பூபதி அன்னை என்ற புயல்!

விடுதலைப் போராட்ட வீதியில் ஒளியுமிழ்
விளக்கெனத் திகழ்பவள் பூபதி!
படுகொலை இந்தியப் படையினர் முகத்தினை
பாரினுக்கு உணர்த்திய மாமதி!
அடிமைக ளாயெமை ஆட்டிட எண்ணிய
அந்நியர் முன்னெழு தீயிவள்!
விடிவினை வரித்திட விரைந்தெழு வீரென
விழித்தெழ வைத்தநற் தாயிவள்!

தென் தமிழீழத் திசையினி லேயொரு
தென்றலாய் அன்னை உதித்தவள்
இன்தமிழீழ இருள்கலைத் தோட்டிட
எழுபுயலாய்க் களம் குதித்தவள்!
வன்முறை யுத்தம் கைவிட்டுப் பேச்சு-
வார்த்தை செய்வீரெனக் கோரினாள்
அந்நிய ஆதிக்க இந்திய வன்படை
ஆணவம் கண்டன்னை சீறினாள்!

மாமாங்கராலய வீதியிலே அந்த
மாமகள் நோன்பினை மேற்கொண்டாள்
வாரங்கள் போயொரு மாதத்தின் நிறைவிலே
மரணத்தின் வரவினைத்தான் கண்டாள்!
சோரங்கள் போயிடார்; துணிந்தவ ரென்பதைச்
சொல்லாது செயலிலே காட்டினாள்
வாருங்கள் அன்னையை வாழ்த்துமிந்நாளிலே
வாஞ்சையொடு களம் நோக்குவோம்!

ஈழநாதம்
(11-04-93)

# நம்பிக்கை!

ஏய்! மதயானையே!
உன்
தும்பிக்கை பெரிதென்று
துள்ளிக் குதியாதே
எங்கள்
நம்பிக்கையின் வலிமையின் முன்
உன் தும்பிக்கை
சிறு ''தும்பி'' கைதான்!
உன் பாதங்களுக்குள்
மிதிபட்டழிய
நாமொன்றும்
கள்ளிச் செடிகளல்ல!
நாங்கள்
கண்ணி வெடிகள்!
ஆம்!
கண்ணி வெடிகள்!
எங்கள் வாழைக் குருத்துக்களை
இனியும்
வதைத்துச் சுவைக்கலாமென்று
வாயூற வேண்டாம்!
எங்கள்
வாழைக் குட்டிகளும்
வாளை ஏந்தி நிற்கும்
உன்
வாலை ஒட்ட நறுக்கும்!
மத வெறி கொண்டலையும்

உன்
மதம் அடக்க
எம்மிடம் மார்க்கமுண்டு!
அதர்மத்தை
அழிப்பது தான்
எங்கள் தொண்டு
எங்கள் தோப்புக்குள்
நீ
எந்த மூலையால்
நுழைய முயன்றாலும்
அங்கெல்லாம் உனக்குச்
சமாதிகளுண்டு!
சின்ன உருவங்களென்று
சிலிர்ப்புக் கொள்ளாதே
இங்கே!
காத்திருப்பவை
கட்டெறும்புகள்!
உன்
தும்பிக்கைகளைத்
துளைத்துச் செல்லும்!
துட்டனே!
உன்னைத் துடிக்கக் கொல்லும்!
எங்கள்
நம்பிக்கை
நிச்சயம் வெல்லும்

ஈழநாதம்
(14-08-1992)

# தியாகச் சுடரோன்

எங்கள் தேசத்தின் இருளகற்றத்
தியாகச் சுடருமிழ்ந்த சூரியனே!
திலீபா!
உன்னை நேசிக்கும் எங்கள் இதயத்துள்
நீ என்றும்
ஒளி சிந்தும் முழுநிலவு!
தியாகத்துள் தியாகம்
நீ செய்த யாகம்!
மகாத்மாக்கள் உண்டு!
நீயோ!
மகா மகாத்மா!
செத்துக் கிடந்த தேசத்தின் உயிர்நாடி
நீ செத்ததும்
தேசத்தின் உயிர்நாடித்தான்!
உன் விழிகளில் ஒளி மங்கியபோது
உன் தேசத்தில் ஒரு வெளிச்சம் பொங்கியது!
நீ கருகிச் சுருண்ட போது
மக்கள் நெஞ்சத்துள்
புத்துணர்வு பெருகித் திரண்டது!
நீ உன்னையே உருக்கி ஒரு
எண்ணெய் வார்த்தாய்!
அந்த எண்ணெய்யில் மூண்ட தீ
என்றும் அணையப் போவதில்லை
அந்தத் தீயின் வேக்காட்டிலே தான்
கோட்டை கொக்காவில் மாங்குளம்
கொண்டச்சி போன்ற படை முகாம்களெல்லாம்
பாடை ஏறின!

நாளை!
நெருஞ்சிப் புதர் போல
மிஞ்சிக்கிடப்பவையும்
நெருப்பிலே வேகும்!
அவை உன் ஆத்மாவின் ஈடேற்றத்துக்கு
அர்ச்சனைகள் ஆகும்!

★ ★ ★

# ஓ! மாவீரனே!

ஓயாத புயலே!
உனக்கென்னடா உறக்கம்?
தேயாத நிலவே
தேன்தமிழ் ஈழம்
உனை எப்படி மறக்கும்?

உன் பெயர் கேட்டால்
உடனந்த எதிரிக்கு வேர்க்கும்!
மன்னவன் நீ உந்தன்
இழப்பினை எது வந்து தீர்க்கும்?

களத்தினில் செந்தணல்
கக்கிடும் உன்விழி
கருணையின் உறைவிடம் தோழா!
உளத்தினில் உறுதியைக்
கொண்டவன் சாய்ந்தனை
உண்மையோ?
எம்மனம் தாளா!

நீ
தாயகம் காத்திட
தலைவனின் பாதையில்
தானை நடத்திய வீரன்!
ஓயுதலின்றியே உழைத்துமே நின்றவன்!
ஓய்ந்தது எப்படி?
ஒருமுறை வாய்திறந்துரையேன்!

கடலுக்கு வாராத உறக்கம்
உன்

கண்ணுக்குள் எப்படிப் பிறக்கும்?
கடலுக்குள் அளவிலா ஈரம்!
உந்தன்
உடலுளம் எங்கணும்
நிறைந்தது உயரிய வீரம்!

வீரனுக்கேதடா சாவு!
மா வீரனே!
உன் புகழ் விசும்பினை மேவும்!
பேரன்பு உனக்குண்டு நம்மண்ணில்
உன்
பேர் புகழ் வாழும் மக்களின் நெஞ்சில்!

ஆயுதம் ஏந்தினாய்
ஆயிரம் எதிரியைச் சாய்த்தாய்!
நீயின்று ஏனடா
நித்திய ஓய்வினை ஏற்றாய்?
ஓய்ந்திடோம் நாமினி
தொடர்கிறோம் உன்பணி
நிச்சயம் புலிக்கொடி பறக்கும்!

எங்கள்
உள்ளத்தில் உதிரத்தில்
உணர்வெல்லாம்
நிறைந்தனை எம்முயிர்த் தோழா!
மாவீரன் உனக்கிலை மரணம்.

★ ★ ★

# குனிந்த கிழவனும் துணிந்து நிமிருங்காலம்!

இந்த மண்
நாங்கள் விளைந்த கருவறை!
இங்கே
எதிரிகள் நுழைந்தால்
அதுவே அவனுக்குக் கல்லறை!
எங்கள் தாயக மேனியில்
சிங்கள நாய்கள்
நகம் பதிக்க
நாங்கள் அனுமதியோம்!
எங்கள்
பாலகர் கைகளில் துலங்கும்
படைக்கருவியும்
எதிரியைக்
காலனூருக்கு அனுப்பவே
காத்திருக்கிறது!
எங்கள்
மங்கையர் தம் பங்களிப்பும்
பகைவரைச்
சங்கரிப்பதுதான்!
இந்த மண்ணில்
நாணல்கள் கூட
வளைந்து கொடுக்க
நாணுகின்றன!
குனிந்த கிழவனும்

துணிந்து நிமிருகின்ற
வீரம்
கனிந்த காலமிது!
ஆதலால்
எதிரியின் கணிப்புக்கள்
தவறாகிப் போகும் என்பதுதான்
சரியான கணிப்பு

ஈழநாதம்
(07-02-1993)

★ ★ ★

# சிந்தையில் நிறைந்த சீலன்

## தமிழ்த்தாய் வாழ்த்து!

பொங்கு மாகவி வாணர்தம் நாவெலாம்
பூரித்து நின்ற மகளே!
செங்கையி லேகுறள் ஏந்தியே வுலகெலாம்
சிறப்பினை வென்ற தமிழே!
தெங்கிள நீரிலும், தேன் கனிச் சாற்றிலும்
தித்திக்கும் உயிரின் அமுதே
நங்கையே! என்றன் நாவிலே கவியெழ
நல்லருள் புரிந்திடம்மா!

## கவிதை

வான்முகில் தழுவிடும் வளரிளந் தெங்குகள்
மா, பலா, வாழை மரங்கள்!
கூன்விழும் கதிரொடு குவியலாய் நெல்லினம்
கொழித்திடும் நன்செய் நிலங்கள்!
மீன் பிடித்தேவர வான்பிறை வடிவிலே
விரிகட லோடும் கலங்கள்!
தேன் திருக் கோணமா மலையிலே யாவையும்
தீயிலே எரிய விட்டோம்!

கந்தளாய் தம்பல கமத்தொடு பன்குளம்
கவினெழில் நிலா வெளியும்!
சொந்த மண் மூதூர் கிளிவெட்டி சம்பூர்
தோப்பூர் கட்டை பறிச்சானும்!
நந்தமிழ் வாழ்ந்திடும் சாம்பல் தீவொடு
சல்லியும் குச்ச வெளியும்!
கும்புறு பிட்டியினோடு திரியாயையும்
குருடராய்ப் பிரிந்து வந்தோம்!

கன்னியா வெல்விரி பாலையூற் றூரொடு
கனித்தமிழ் ஆலங்கேணி
இன்னிசை வேந்தன் இராவணன் பூமியில்
எத்தனை ஊர் பிரிந்தோம்!
மன்னவ னாண்ட நல் மாமணித் தமிழ் நிலம்
மறந்து நாம் வாழ்வ தெங்கே?
இன்னமும் அதிகநாள் ஏங்கியே கிடப்பதில்
இறப்பு மேல் எழுக போர்க்கே!

பசியினாற் குழந்தைகள் பரிதவித் தழுதிட
பற்பல காதம் நடந்தோம்!
கசிவிலாச் சிங்களக் காடையர் கொடுமையால்
காட்டிலே தஞ்சம் புகுந்தோம்!
விதியினை மாற்றியோர் விடுதலை படைத்திடும்
வேங்கைகள் துணையை அடைந்தோம்!
எதுநிலை சூழினும் இனியவர் துணையினை
இம்மியும் பிரிய நினை யோம்!

பட்டிக் குடாக் கடல் படகிலே கடந்த பின்
பற்பல ஊரை அடைந்தோம்!
இட்டமாய்ச் செம்மலை அளம்பில் முல்லையூர்
இனித்திடும் தண்ணீரூற்று!
முட்பலா மிகுந்த நல் முள்ளிய வளை யொடு
மூத்த புதுக் குடியிருப்பு
நட்பென முத்தையன் கட்டொடு கைவேலி
நாடினோம் வள்ளி புனமும்

சுதந்திர புரத்தொடு உடையார் கட்டிலும்
சுகந்தரு மூங்கிலாறும்!
இதந்தரு விசுவ மடுவினைச் சேர்ந்த தோர்
ஈடிலாப் பிரமந்த னாறும்!
முதுமறப் புலியெனும் பண்டார வன்னியன்
முடியரசாண்ட தலங்கள்!
கதியிலை என்றுமே களைப்பொடு வந்தவர்
கால்களை ஆற்றும் இடங்கள்!

அகதிக ளென்றெமை அழைக்கலா மாயினும்
அகதிகள் நாங்களில்லை!
அகதிக ளென்பவர் ஆருமே யற்றவர்
அவர்க் கென எதுவும் இல்லை!
சுகநிலை மறந்து பொன் விடுதலை வேள்வியைத்
துணிவொடு நடத்தும் வீரர்
பகலிரா வெங்களின் பக்கலில் துணையுளார்
பகர்வதார் அகதி யென்று?

சிதறிய நிலையிலே சீரெலாம் தொலைந்துமே
சீவியம் நடத்தும் போதும்
புதுயுகம் படைத்திடப் பொன்னுயிரீந்த நம்
புலிகளை மறக்க வில்லை!
கதைகளாய்க் கவிகளாய்க் காவிய வடிவமாய்
காண்கிறோம் அவரை இங்கே!
விதைகளாய் வீழ்ந்தவர் விருட்சமாய் எழுகிறார்
விடுதலை நிழல் எமக்கே!

காலனை வென்றொரு காவியம் படைத்திட
களத்திலே புகுந்த வீரன்!
சீலனை எங்களின் சிந்தையில் வைத்துளோம்
செத்ததென் றாருரைத்தார்?
''ஞாலமே வியந்திடும் நம்புலித் தலைவனின்
* நன்மகன் நாமம் சீலன்!''
காலமோ ராயிரம் கரையலாம் சீலனோர்
காவியம் நீடு வாழ்வான்!

ஆரம்ப காலமே புலிகளின் அணியிலே!
அவனுமோர் அங்கமானான்!
பூகம்பமாகவே! எதிரிகள் படையினைப்
புரட்டிடும் வேங்கை யானான்!
ஆளம்பு சொற்பமாய் அணியது வளர்கையில்
அவன் பெரும் சக்தியானான்!
பேரன்பு கொண்ட வெம் சீலனோ நெஞ்சிலே
பெருஞ்சுடர் பெருக்கி நிற்பான்!

திருமலை என்றதோர் எரிமலை சீலனெம்
சிந்தையில் நிறைந்த ஜோதி!
ஒரு மலை போலவே உலுத்தரின் படைகளை
ஓடிட எதிர்த் தடித்தான்!
சருகென வெறியரைச் சாய்த்திடும் வேளையில்
சதியினாற் சாய்ந்து போனான்
உருவமே மறைந்தது உண்மையில் சீலனெம்
உணர்வெலாம் நிறைந்து போனான்!

சீலனின் ஆவிபல் லாயிரம் சீலரை
தினமுமே படைக்கு திங்கே!
ஓலமிட்டமுதுடல் ஊனமுற்றோடியே
ஒதுங்குவார் எதிரியிங்கே
வாலறு பட்டபின் வாய்விடும் மந்தியாய்
வருந்துவார் பிறேமதாசா!
வேலையோ எமக்கினி விடுதலை கண்டிட
''வேலையே'' தூக்கிடும் வேலையாகும்!

ரணசிங்க புத்திரன் ராத்திரி நடுவிலே
வாய்விட்டலறு கின்றார்!
நரசிங்க ரூபமாய் அவரிடம் கரும்புலி
நகர்வதாய்க் கனவு கண்டே
''சிறில்ரண துங்க'' வும் ''கொப்பேகடுவையும்''
சேர்ந்துமே குழம்புகின்றார்!
சிரித்துமே சாவுடன் சென்றுகை குலுக்குமெம்
தீரரின் தியாகம் கண்டே!

சாவிலே உயிர்ப்பினைத் தந்திடும் புலிகளைச்
சரித்திரம் ஏற்றி வாழ்த்தும்!
பாவிலே அவர்புகழ் பாடிடக் கவிஞர்கள்
படையெனப் பெருக வேண்டும்!
நாவிலும் மனத்திலும் நம்மறப் புலிகளின்
நாமமே ஒலிக்க வேண்டும்!
கோவிலாம் மனங்களில் தெய்வமாய் அவர்களை
குறைவிலா தஞ்ச லிப்போம்!

புலேந்திரன், குமரப்பா, சந்தோஷம் பாதையில்
புறப்படும் இளம் புலிகள்!
சலிப்பெது மின்றியே மில்லரின் வடிவிலே
தளையினை நொறுக்கி வைப்பார்!
அலையலை யாகவே ஆயிரமாயிரம்
அரும்புகள் அணிவகுப்பார்!
நிலையுடன் எம்மவர் நிம்மதி கண்டுமே
நிச்சயம் வாழ வைப்பார்

வாழ்க சீலனின் நாமம்!
வளர்க புலிகளின் வீரம்!
வெல்க தாய்த் தமிழீழம்!

* விடுதலைப் புலிகளின் தலைவரும் தமிழீழத் தேசியத் தலைவருமான திரு. வே. பிரபாகரன் அவர்களின் மூத்த புதல்வனின் பெயர், சீலனின் சொந்தப் பெயரான சாள்ஸ் அன்ரனி என்பதாகும்.

(15-07-91 அன்று மூங்கிலாறு 'ஆனந்' கலை அரங்கில் நிகழ்ந்த மாவீரன் லெப். சீலனின் 8 ஆவது ஆண்டு நினைவு நாள் விழாக் கவியரங்கில் பாடியது.)

★ ★ ★

# திலீபனென்ற தியாக மலர்ச்சோலை

## தமிழ் அன்னை வணக்கம்!

புன்னகை பொலிய வீரப்
புலிக் கொடி கையி லேந்தி!
நின்றருள் செய்யு மெங்கள்
நிகரிலாத் தமிழே தாயே!
மன்னவர் தொட்ட ஞான
மலரடி தொட்டு யானும்
உன்னையே தொழுதேனம்மா!
உவகை கொண்டருளு வாயே!

## மாவீரர் வணக்கம்!

தமிழீழத் தாய் விலங்கைத்
தகர்த் தெறியப் புறப்பட்டு!
அமிழ்தனைய உயிர் உடலை
அர்ப்பணித்த மாவீரர்
குமுத மலர்ப் பாதத்தைக்
கும்பிட்டுத் தொழுகின்றேன்

## அவை வணக்கம்!

மூங்கிலாற்றின் முற்றத்தில்
பாங்கோடு ஒளிரும்
''ஆனந்'' கலையரங்கில்
தூங்காது விழித்திருந்து

தூயதமிழ்க் கவி கேட்க
ஆர்வமொடு அமர்ந்திருக்கும் சுவைஞர்களே!
பூச்சரமாய்த் தொடுத்த தமிழ்ப்
பாச்சரத்தைப் படிக்க நிற்கும் கவிஞர்களே!
எல்லோர்க்கும் என்றன்
இனிய தமிழ் வந்தனங்கள்!
வந்தனங்கள் தெரிவித்து
எங்கள்
வீரத்தமிழ்த் தாய்க்கோர்
விண்ணப்பம் செய்ய விழைகின்றேன்.

## வீரத் தமிழ்த்தாய்க்கோர் விண்ணப்பம்

அம்மா தமிழ்த் தாயே!
அடியேனோர் விண்ணப்பம்!
பொம்மர் அவ்ரோக்கள் போடுகிற குண்டுகளால்
இம்மண்ணில் தினந்தோறும்
உன் மக்கள் சாய்கின்றார்!
கோட்டையிலே கொடியேற்றி
கொக்காவில் மாங்குளத்தில்
சாட்டையடி கொடுத்துச் சளைக்காது எதிரியினை
ஓட்டமிடச் செய்தார் உன் மக்கள்!
புலிவீரர் போட்டுள்ள
பூட்டை உடைத்துப் புகுந்துவட புலத்துள்
வேட்டையிடுவேனென்று
வீராப்புப் பேசி
நாட்குறித்தோர் தம்மை
நாவடங்கச் செய்து வைத்தார்!
வீரப் புலிப்படையை
மழலைப் பட்டாளம் என்று வர்ணித்த-(ரஞ்சன்)
மாமாவின் கதை முடிந்த வரலாறும் நீயறிவய்!
கொண்டு சுடலையிலே
கொளுத்தி முடிப்பதற்கோர்

துண்டும் கிடையாமல்
சிதறுண்டு போய்விட்டார்!
ஆனையிறவுப் பாழ்வெளியில் சிங்களத்துச்
சேனா சமுத்திரத்தைச் சிதற அடித்ததிலே
போனார் அறுநூறு புலிவீரர்!
போகையிலே!
ஏனோ தமிழ்த்தாயே இரங்காமற் பார்த்திருந்தாய்?
மானத் தமிழ்த்தாய் நீ மறவாமற் சிங்களத்துச்
சேனைக்கோர் சாபம் போட்டால் எரியாதா?
இன்று மணலாற்றில்
எரியும் தணலூடே
நின்று போராடி நின்மானம் காப்பதற்காய்
தின்னவரும் தீப்பிழம்பைத் தின்று சுவை பார்க்கின்றார்
சின்னப் புலிவீரர்!
எட்டுத் திசைகளிலும் எதிரிப்படை வந்து
முட்டித்தான் பார்க்கிறது முயற்சியினைத் தொடர்கிறது
விட்டுவிடப் போவதில்லை என்று புலிவீரர்!
நட்டு வைத்த மரம் போலாய்
நின்று தவம் செய்கின்றார்!
கட்டாயம் நீயவரைக் காப்பாற்ற வேண்டுமெனக்
கவிஞன் நான் கரங் கூப்பிக்
கனித்தமிழால் இறைஞ்சுகிறேன்!
அம்மா தமிழ்த்தாயே!
சீனத்து விமானங்கள் சீறிவலம் வருகையிலே
வானத்தில் நீ புயலாய் வந்து திசை மாற்றாயா?
பொம்மரோடு அவ்ரோக்கள்
புயலுக்குட் தான் சிக்கி
தொம் மென்று விழுந்தெரியத் துணை செய்யமாட்டாயா?
அகதிகளாய் இங்கு வந்து
அவலத்துள் ஆழ்ந்தபடி
திகதிகளை ஆண்டாகத் தினந்தோறும் கழிக்கின்றோர்
நிம்மதியாய்ப் போய்வாழ
நீயருள மாட்டாயா?

அம்பாறை மட்டுநகர் அழகான திருமலையில்
தும்பாகித் துடிக்கும் தமிழ்மக்கள் துயரறுக்க
அம்மாவே நீ புதிய அக்கினியாய் மூண்டெழுவாய்
மக்கள் புரட்சியினால் மலரட்டுந் தமிழீழம்
சிக்கல் அறுந்திங்கு சிரிக்கட்டும் புதுவாழ்வு!
இப்படியாய்த் தமிழ்த் தாயை
இன்றமிழால் வேண்டி விட்டுத்
தப்பாமல் திலீபனெனும்
தியாக மலர்ச் சோலையினை
நெஞ்சார நினைந்துருகி
அஞ்சலிக்க வருகின்றேன்!

## திலீபனென்ற தியாக மலர்ச் சோலை

ஊரெழுவில் பிறந்து வந்த உயர்ந்த ஞானம்! — தமிழர்
உரிமைக்காய்த் தனையெரித்து ஒளிர்ந்த தீபம்!
சீரொழுகும் பண்புநலம் கொண்ட சீலன்! — எங்கள்
சிந்தையிலே நிறைந்துறையும் அன்புத் தோழன்!
புலிப்படையாய்க் களம் புகுந்த புரட்சி வீரன்! — பெரும்
புயலாகி எதிரிகளைத் தொலைத்த தீரன்!
சிலிர்த்து வரும் சிங்களத்தைக் கலைத்த சிங்கம் — உயர்
செந்தமிழர் வரலாற்றில் நிலைத்த குன்றம்

பேச்சோடு செயலாக்கப் பெருமையுள்ள நம்பி — அவன்
பிரிவாலே நாமழுதோம் உள்ளமெல்லாம் வெம்பி!
மூச்சினையும் தமிழீழ மண்ணுக்காய் விடுத்தான்! — பெரு
மூச்செறிந்து முழுவுலகும் கண்கலங்கப் படுத்தான்!

உடலுறுப்பு இன்றி உயிர் வாழ்ந்திடலாம் என்றான் — மண்ணில்
ஓரினமும் நாடின்றி வாழ்வதரி தென்றான்!
குடலில் ஒருமுழமளவு திலீபனன்று இழந்தான்! —மாற்றான்
குண்டுடலைத் துளைத்தாலும் குன்றாது வளர்ந்தான்!

யாழ்ப்பாணக் கோட்டையிலே புலிக்கொடிநின்றாடும்–
அந்த
நன்னாளே! பொன்னாளாம் என்றுரைத்தான் பாரும்!
பாழ்பட்ட தமிழ்ச்சாதி தலைநிமிரும் காலம் – தமிழ்ப்
பண்பாடும் கவின்கலையும் கண்டுய்யும் ஞாலம்!

அறுபத்து மூன்றாவ தாண்டினிலே பிறந்தான் – தாயை
ஐயிரண்டு மாதத்துள் பாலனவன் இழந்தான்!
பொறுப்புள்ள தந்தையிடம் பொற்கிளிபோல் வளர்ந்தான்–
தாயைப்
போலெண்ணித் தமிழீழத் தாயகத்தைத் துதித்தான்!

பல்கலைக் கழகம்வரை படித்துயர்வு கண்டான் – நல்ல
பதவியினை நாடாது களம்புகுந்து கொண்டான்!
அல்லுபகல் பாராது அயராது உழைத்தான்! – ஈழ
அன்னையவள் பாதத்தில் இன்னுயிரை விடுத்தான்!

ஒரு சொட்டு நீர்கூட அவனருந்த வில்லை! உடலில்
ஓடிநின்ற குருதி வற்றிக் காய்ந்ததுதான் உண்மை!
திருவோடு வாழ்கின்ற சிறுவயதுக் களை – ஒளித்
தீபமென எரிந்தணைந்தான் தியாக மலர்ச் சோலை!

"ராஜீவும் ஜே. ஆரும்" ஒப்பந்தம் செய்தார்! – அமைதி
ராகத்தை இசைத்தபடி தீப்பந்தம் எய்தார்!
பாசமென வந்தவர்கள் வேசமதைக் கலைத்தார் – கொடும்
பாசிசத்தைத் தமிழீழ தேசத்துள் விதைத்தார்!

களங்கண்ட மறப்புலியோ காந்திவழி நின்றான் – அந்தக்
காந்தி பெயர் கொண்டவரோ! கண்மூடிச் சென்றார்!
இளந்தமிழன் உண்ணாத நோன்பினிலே எரிந்தான் –
பார்த்து
இருந்திருந்து, இறந்தபின்னர் அநுதாபம் புரிந்தார்!

துள்ளிவிளை யாடியவன் துடிப்படங்கிப் படுத்தான் – மிகத்
துடிதுடித்து அணுவணுவாய்த் தன்னுயிரை விடுத்தான்!
பிள்ளையவன் பிஞ்சுடலம் சருகாகிப் போச்சு – கண்ணீர்ப்
பெருவெள்ளம் ஈழமெங்கும் கரைகடக்கலாச்சு!

வெள்ளைக் கொடியோடு வீதிவலம் வந்தோர் – உண்மை
வேடம் சிவப்பென்று எமக்குரைத்து நின்றார்!
குள்ள நரிக் கூட்டம் தனைமக்க ளுணர்ந்தார் – அவர்
கொடுமைக் குணங்கண்டு நெஞ்சம் வெகுண்டார்!

மாற்றாரின் துணையாலே மலராது ஈழம் – நாம்
மனமொன்று பட்டெழுந்தால்! செல்லாது காலம்!
காற்றோடு கலந்திட்ட திலீபனின் ஆவி – சொன்ன
கதை கேட்க மறந்தாலோ நாமெல்லாம் பாவி!

திசையெட்டும் முழங்குது பார் திலீபனது நாமம் – அவன்
திருவார்த்தை நம் வாழ்வில் ஒளியூட்டும் வேதம்!
விசைகொள்ள வேண்டுமடா தமிழீழ மக்கள் – நாளை
விடிவுண்டு! நம்வாழ்வில் முடிந்துவிடும் சிக்கல்

தியாகத்தின் எல்லையடா! திலீபனெங்கள் செல்வம் – ஈழ
தேசமெங்கும் மணக்கின்ற புதுவாச முல்லை!
வியாபித்து நிற்கின்றான் நெஞ்சமெலாம் விரிந்து – அந்த
விண்ணொளியை அஞ்சலிப்போம்! இதயப் பூச்சொரிந்து!

ஈழநாதம்
(26. 09. 92)

*26-09-91இல் மூங்கிலாறு 'ஆனந்' கலையரங்கில் இடம் பெற்ற தியாகி லெப். கேணல் திலீபனின் நான்காவது ஆண்டு நினைவுநாட் கவியரங்கில் பாடியது.*

# திருமலை காத்த எரிமலை!

## தமிழன்னை வாழ்த்து

புன்னகைத்து வீரமுடன்
புலிக் கொடியைக் கைப்பிடித்து
நின்றருளும் தமிழ்த் தாயே
நின்னடிக்கு முதல் வணக்கம்

## மாவீரர் வணக்கம்

தமிழீழத் தாயின் அடிமைத்தளை யுடைக்க
உயிர் வெறுத்துப் போராடி
உதிரத்தால் மண் நனைத்து!
விதையாக வீழ்கின்ற
மாவீரர் பொற்பாதம்
மனங்கனியத் தொழுகின்றேன்!

## அவை வணக்கம்

நான்கு ஆண்டுகளின் முன்னால் நமக்காகத்
தமதுயிரை அர்ப்பணித்த
பன்னிரண்டு வேங்கைகளின்
நினைவில் நனைவதற்காய்
இங்கு குழுமி நிற்கும்
எனதருமை அன்னையரே! தந்தையரே
இளையவரே மூத்தவரே!
அறிஞர்களே! சுவைஞர்களே!
அருங்கவிகள் பாட நிற்கும்
அருமைக் கவிஞர்களே
எல்லோர்க்கும் என்றன்
இனிய தமிழ் வந்தனங்கள்!

## கவிதை

சிங்கள நெருப்புத் தின்று முடிக்கத்
தினமும் துடியாய்த் துடிக்கும் திருமலை!
எங்கணும் கொள்ளை கொலை வெறியாட்டம்
எதிர்த்தால் சிங்களப் படையணி வாட்டும்.

கோணேசுவரத்தைச் சிறையிடும் கோட்டை
குரங்கினை விஞ்சும் ஆமிகள் சேட்டை!
தூணிலும் துரும்பிலும் சிங்கள வாடை
தூய செந்தமிழ் ஏறிடும் பாடை!

கழுமரம் போன்று தமிழரின் விழிமுன்
காட்சி தந்திடும் மணிக்கூண்டுக் கோபுரம்!
கொழுத்த சிங்களக் காடையர்கள் தீட்டிய
கொடுவாள், தமிழனை மீனென அரியும்!

மரக்கறிச் சந்தையில் சிங்கள வாசம்!
வதங்கிய கீரையும் முறைப்புடன் பேசும்!
சுரக்கும் அவர்களின் பெட்டியிற் "சல்லி"
சுறுக்கிலே முதலாளி சிங்கள "மல்லி"

பாதையோர வியாபாரி "பண்டா!"
பறந்து செல்வது புதுப்புது "ஹொண்டா"
சீதைகள் மீதும் சேட்டைகள் செய்வான்
சிங்களப் பார்வைக் கணைகளை எய்வான்

"சிந்தாமணி முதலாளி" வீடெரிப்பான்
சிறிமாபுரத்திலே தமிழனை அறுப்பான்!
வந்தவன் போனவன் தெருவிலே கொன்று
வதைத்து ரயரோடு கொளுத்தி முடிப்பான்!

மடத்தடி தொடங்கி அபயபுரம் வரை
மானத் தமிழர்க் (கு) அபாயம் நிரந்தரம்!

கடத்தியே சென்று கழுத்தை அரிந்த பின்
கழிவுக் கிடங்கினில் போட்டொளிப்பார்கள்

அநுராத புரத்துச் சந்தியில் அடிவிழும்
அம்மா! என்று அலறினால் வெடி விழும்!
" சனீசுவரனுக்கும் சனியன் பிடிக்கும்
விக்னேசுவரனுக்கும் விக்கினம் நிகழும்!

" கீளி " பிடிக்க வந்த "கிரி மாத்தையா"
கேடியின் கூட்டம் கேடுகள் விளைக்கும்
காளி உலாவரும் தேரையும் எரிப்பான்
கன்னியா நடேசரின் கோயிலைச் சரிப்பான்!

பேழை வயிற்றுப் பிள்ளையார் தம்மைக்
குளிக்கப் போனதாய்க் கடலினுள் எறிவான்!
வாளை ஏந்தி வாளை மீனென
வலிந்து தமிழரை வதைத்து மகிழுவான்!

நாலாங் கட்டையில் நறுக்குவான் தமிழனை
நாயிலுங் கீழாய் நடத்தியே மகிழ்வான்
காலி கந்தறை இருந்து வந்தவன்
காலின் செருப்பாய்த் தமிழனை மிதிப்பான்

அல்லை கந்தளாய்ப் பக்கம் தமிழர்க் (கு)
அடிக்கடி நிகழும் தொல்லைகள் அநந்தம்
வில்கம் விகாரைப் பக்கமும் நெருக்குதல்
வெறியர் சிங்களக் குடியினைப் பெருக்குவர்!

## வேறு

இப்படியாகத் திருமலை எங்கணும்
எப்படித் தமிழன் வாழ்வது என்றே
ஏங்கி ஏங்கியே வாழ்ந்த எம்மவர்க்கு
இடையில் ஒளியாய்ப் புலேந்திரன் வந்தான்!
வீரம் செறிந்த பிரபாகரனெனும்
வேங்கையின் புலிப்படை அணியிலே இணைந்தான்

வானம் இடிந்தெம் தலையினில் வீழினும்
மானம் காத்து எம் மண்ணதை மீட்டிட
வந்தவர் நாமென மறப்புலி எழுந்தது
சிந்தையில் ஒருதரம் சிறப்புடன் மலர்ந்தது!
வேருக்கு நீராய் வீழ்ந்தவன்! விடுதலைப்
போருக்குப் புலியாய்ப் பாய்ந்தவன் புலேந்தி!
அலையைக் கிழித்துப் படகினைச் செலுத்தி இயக்க
நிலையை உயர்த்த ஆயுதம் கடத்தினான்!
திருநெல்வேலிச் சந்தியில் பதின்மூன்று - (ஆமிகள் )
சருகாய்ப் பறந்திடத் துணையாய் நின்றவன்!
சோடிச் செருப்பைக் காலுக்கு அணியாது
ஓடிக் கல்லிலும் முள்ளிலும் அலைந்தான்!
வன்னிக் காட்டில் இறங்கித் திருமலைப்
புண்ணிய பூமியை வந்து சேருவான்!
" கித்துல் ஊத்து அலுத்தோயா பதவியா
மற்றும் திரியாய் புல்மோட்டை புடவைக்கட்டு
குச்சவெளி" யெனக் குடியேற வந்தவர்
பிச்சை வேண்டாம் என்றோட வைத்தவன்!
திருமலை மண்ணின் எல்லையைக் காத்திட
எரிமலை போன்று குமுறித் திரிந்தவன்!
கண்ணி வெடிகளை முழக்கி எதிரியை
மண்ணிலே சிதறப் பண்ணியே நின்றவன்!
ஆமி பொலிசு அதிரடி யாவையும்
சாமி சரணம் என்றோட வைத்தவன்!
ஏ. கே. எடுத்து இயக்கி எதிரிதன்
நோக்கம் மறந்து நொந்தழ வைத்தவன்!
சண்டையைக் கரும்பாய் எண்ணி வெறியரின்
மண்டையைப் பிளப்பதை மார்க்கமாய்க் கொண்டவன்
அம்மான் புலேந்தியின் தலைக்கிரு லட்சம் - கிழட்டு

அம்மான் ஜே. ஆர். தருவதாய்ச் சொன்னார்;
அத்துலத்து முதலியும் ஆவலாய் வாயை
மெத்தவும் திறந்து மினக்கெட்டுரைத்தார்!
எண்ணாயிரம் படையை இறக்கிக் காட்டிலே
கொண்டாருங்கள் தலையெனக் குந்திக் கிடந்தார்
முடிந்து அவர்தம் முயற்சி பலித்ததா?
கடிந்து படைகளைக் கத்தியே இரைந்தார்!
இப்படியாக இருக்கும் வேளையில்
செப்படி வித்தையாய் ஒப்பந்தம் வந்தது!
இந்திய இலங்கை அரசுகள் கூடித்
தந்திரமாயொரு வலையினைப் பின்னின!
தமிழனைக் காப்பதாய் வந்த இந்தியா
அமிழ்தென நஞ்சை அள்ளியே தந்தது!
திலீபனைத் தின்ற ஒன்பதாம் நாளிலே
பலியிட்டு மகிழ்ந்தனர் பன்னிரு வேங்கையை!
அமைதி வந்ததாய் நம்பிய மக்களோ
அமளி வந்ததைக் கண்டு கலங்கினர்!
காக்க வந்ததாய்க் கதையளந்தோர் எமைத்
தாக்கவே வந்ததைத் தமிழினம் உணர்ந்தது!
நம்பியே நின்ற மக்களின் கழுத்தைத்
தும்பிக் கையால் திருகியே கொன்றனர்!
நேருபேரனின் நெஞ்சத் துரோகத்தை
நேரடியாகவே கண்டு கொதித்தனர்!
தர்மம் தலையைக் காக்கும் உண்மை! — அதனைத்
தாக்க முனைந்தால் தலைதூளாக்கும்!
ராஜீவ் காந்தி இதனை மறந்தார் — அதனால்
தலையே சிதறித் தாமும் இறந்தார்!
ஆயிரங்காலம் போயினும் எங்கள்
புலேந்திரன் நாமம் பூமியில் வாழும்!

குமரப்பாவெனும் குலவிளக் கொளிரும்
கூடவே சென்ற முத்துக்கள் மிளிரும்!
மீண்டும் அவரெம் மண்ணிடைப் புதிதாய்த்
தோன்றித் தோன்றித் துணையாய் இருப்பர்!
எங்கள் தியாகச் சுடர்களை நெஞ்சம்
பொங்கித் ததும்ப அஞ்சலி செய்தே
இன்றே அவர்தம் பாதையிற் செல்வோம்!
நாளை விடுதலை நமக்கெனக் கொள்வோம்.

*5-10 91இல் விசுவமடு 'நாதன்' குடியேற்றத் திட்டத்தில் இடம்பெற்ற, லெப். கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் நான்காவது நாட் கவியரங்கில் பாடியது.*

★ ★ ★

# தமிழீழ மண்ணின் பேறு!

அரியாலை ஈன்றளித்த உமை நேசன்
அழகுமகன் சந்தோசம் புரட்சி வீரன்!
எரிகின்ற தமிழீழ மண்ணை மீட்டு
எடுத்திடவே புலியாகிக் களத்தில் பாய்ந்தோன்
விரிவான பல்கலைகள் பயிலும் வேளை
விடுதலைக்காய் அதைவிடுத்த மண்ணின் மைந்தன்
சிரித்தாலோ அழகொழுகும், சினந்தால் வேங்கை
சிந்தனையில் தமிழீழம் ஒன்றே வைத்தோன்!

வடக்குமுதல் தெற்கீழம் வரையும், பாதம்
வைத்து நடை பயின்றியக்கம் வளர்த்து நின்றோன்
அடக்கு முறைச் சிங்களத்தின் படைகள் ஓட
அதிர்வுதரும் ''முதலடிகள்'' பலவும் தந்தோன்
இடர் சூழ்ந்த திருமலைமண் தன்னைக் காக்கும்
இணையற்ற தளபதியாய் இலங்கி நின்றோன்!
சுடரனைய ''சந்தோசம் மாஸ்ரர்'' புகழைச்
சொல்லிவிடக் கவிதையிலே ஒன்றா நூறா?

தங்கநிகர் தலைவர் பிரபாவின் நெஞ்சம்
தனைக் கவர்ந்த போராளி, எதிரியான
சிங்களவர் கேட்டஞ்சும் பெருத்த வீரன்
சீராளன் தமிழீழ மண்ணின் பேறு
எங்கிருந்தோ வந்த அயல் வெறியரான
இந்திய நாட்டுப்படையை எதிர்த்து மோதிச்
சங்கரித்த வேளையிலே சாய்ந்தான் மண்ணில்
சாயாது அவன் நாமம் வாழும் நெஞ்சில்!

(வேறு)

முளை விடுத்த புலிப்படையின் மூத்த உறுப்பினனாய்
முனைப்போடு பணிபுரிந்தவன்!
களையெடுத்து நல்லியக்கம் செழிப்போடு தான்வளர
கருத்தோடு விழித்திருந்தவன்!
சுளைபோல மொழிபேசி துடிப்பான இளைஞர் தமை
துணிவோடு படை சேர்த்தவன்!
தளை வெட்டித் தமிழீழத் தாயக மண்மீட்கத்
தளபதியாய் நின்றவன்!

புலியாகிக் களஞ்சென்று புலையர்தம் படைவென்று
புரட்சியைத் தான் வளர்த்தவன்!
பலிகொண்டு தமிழரைப் பதம்பார்த்த வெறியரைப்
பலி கொண்டு பழி தீர்த்தவன்!
பொலிவான தமிழீழப் புலர்வுக்கு வழிதேடிப்
புயலாகிச் சுழன்றுழைத்தவன்!
அலியல்ல தமிழ்ச்சாதி அஞ்சியே ஓடிட!
அரிமாக்கள் என்றுரைத்தவன்!

நரிபோல வஞ்சனை நாள் தோறும் புரிந்திட்ட
நஞ்சரின் வாலறுத்தவன்!
பரிவோடு தமிழீழ மக்களைக் காத்திடும்
பணியிலே நிகரற்றவன்!
விரிவான அறிவோடு விடுதலை உணர்வெனும்
விதையினைத் தினம் விதைத்தவன்!
அரியாலை மண்ணீன்ற அருந்தவப் புதல்வனாம்
உமைநேசன் உளம் நிறைந்தவன்!

ஆரம்பகாலத்துப் போராட்ட நிகழ்வுகள்
அனைத்திலும் பங்கெடுத்தவன்!
பாரங்கள் தோளேற்றிப் பாதத்தில் செருப்பின்றி
பல காடு மலை கடந்தவன்!

நேரங்கள் பாராது நித்தமும் களத்திலே
நேர் நின்று சமர் புரிந்தவன்!
சோரங்கள் போகாத தூயவன் "சந்தோசம்"
துலங்கிடும் விடிவெள்ளியே!

தமிழீழத் தாயகத் தலை நகர் திருமலைத்
தளபதியாய் நின்றவன்!
குமுறிடும் எரிமலை போலுளம் கொதித்திட
கொடியவர் தமை வென்றவன்!
அமைதியைச் சாட்டியே இங்குற்ற இந்திய
அமளி செய் படை கொன்றவன்!
உமையவள் நேசனாம் உத்தமன் சந்தோசம்
உயிரிலே கலந்த வீரன்!

பாசிச இந்தியப் படைகளின் கொடுமையால்
பைஞ்சுடர் அணைந்த போதும்!
வீசிடும் தென்றலில்! விண்ணொளிக்கதிரினில்
வேங்கையின் ஆவிபேசும்!
நேசிக்கு மெங்களின் நிகரற்றதாயகம்
நிச்சயம் விடிவு காணும்!
பூசித்து நித்தமும் போற்றிடும் தமிழினம்
புரட்சிவான் சந்தோசமே!

இக்கவிதையின் ஒரு பகுதி 21. 10. 1992 'ஈழநாதத்' தில் வெளியானது.

முழுக்கவிதையும் அதேதினம் அரியாலையில் நிகழ்ந்த லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரரின் 5 ஆவது ஆண்டு நினைவு விழாவில் பாடியது.

# மாவீரர் பாதையிலே மக்களெல்லாம் எழுந்திடுவீர்

தமிழீழ மீட்புக்காய்
தலை கொடுத்த மாவீரர்!
''சங்கர்'' என்ற நம் சத்தியசீலனை
சாள்ஸ் அன்ரனி ஆசீர்சீலனை
ஆனந் செல்லக்கிளி என வரிசையாய்
போனவர் எத்தனை புலிப்படை வீரர்கள்?
மானத் தமிழர் வாழ்வில் இவர்களை
மறப்பதென்பது மண்ணில் நிகழுமோ?
பாயும் புலிநம் பரம தேவா
விக்டர், ராதா, மூதூர் கணேஷ்
பொன்னம்மான் புலேந்திரன்
குமரப்பா, சந்தோசம்!
பண்டிதர், அக்காச்சி, அருணா, சுரேந்திரன்
சுரேஷ், கமல், மதி என்று எத்தனை
சுதந்திர ஒளிகளை
இழந்துளம் தவிக்கின்றோம்!
சூட்டி, சுந்தரி, கேடில்ஸ், சோதியா,
சரா, நீகன் என்றெல்லாம்
எத்தனை நிலவுகள்
எமக்கு ஒளிதர இருளிடை வீழ்ந்தன?
அத்தனை பேரையும் அழுத்தமாய் மனத்திலே!
வித்தெனப் பதித்துளோம்
விழுது விட்டெழுந்து நிற்பர்
பால்மணமே மாறாத பள்ளி வயதினிலும்!
பாசமிகு அன்னையிடம் வளர்கின்ற வேளையிலும்!

துள்ளி விளையாடும் துடிப்பான இளமையிலும்!
மில்லர்! திலீபன்! போர்க் டாம்போ,
சிதம்பரம், ஜெயந்தன், வினோத், கொலின்ஸ்,
காந்தரூபன் என்று எத்தனை
கண்ணின் மணிகள் கனலிடை வீழ்ந்தன?

தம்மைச் சிதைத்துத் தமிழீழம் அமைத்திட
அத்தி வாரமாய் ஆனநம் மாவீரரை
என்றுமே நினைவிற் கொண்டு
அவர்களின் இதய தாகம்
தணிந்திடத் தமிழீழத்தை
வென்றிட உழைப்பதென்றே
இன்று நாம் உறுதி கொள்வோம்!
ஈழத் தமிழினமே!
எனதருமைத் தாயகமே! – நாம்
வாழத் தமிழீழம் வாஞ்சையுடன் அமைக்கவென
மாளத் துணிந்து சென்ற
மாவீரர் பாதையிலே!
நாளைக் கடத்தாது நாமின்று சென்றாலே
நாளைக்குத் தமிழீழம் நமதென்று நிலைத்திருக்கும்!

வீணைக் கொடியோடு வேந்தன் இராவணனின்
ஆணைக்குட்பட்ட அழகான நாடு எங்கே?
எல்லாளன், சங்கிலியன், பண்டார வன்னியன் என்ற
எம்மவர்கள் ஆண்டிருந்த இறைமையுள்ள பூமி எங்கே?
பருத்தித்துறை தொடக்கம்
தெய்வந்துறை முனைவரைக்குள்
பண்பான தமிழீழப் பசிய நிலப்பரப்பு எங்கே? – என்று
சிந்தித்தால் நெஞ்சுக்குள் சினநெருப்பு மூளாதோ?

ஐம்பத்து ஆறு முதல் அடித்தடித்துத் தமிழர்களை
தும்பாகத் துவைத்தெடுத்த துயரங்கள் மறப்போமா?
தார் கொதிக்கும் பீப்பாய்க்குள்
தமிழர்களைத் துடிதுடிக்கப்

போட்டவித்த துயரத்தின் புண் நெஞ்சில் ஆறிடுமோ?
மார்பகங்கள் அறுத்தெங்கள்
மாதர்களை வதைத்தெடுத்த
சிங்களவர் கொடுமை எம்மைப்
பொங்கியெழ வைக்காதோ?

நாட்டுக்கு முதுகெலும்பாய்
நாட்டமுடன் உழைத்த - மலை
நாட்டுத் தமிழர்களை
நறுக்கிப் பிழிந்து விட்ட
நரகநிலை மறப்போமா?

தெருவினிலே போட்டுதைத்து
கப்பலிலே அகதிகளாய்
காங்கேசன் துறை முகத்தில்
அப்போது! கொண்டு வந்து
கொட்டி விட்ட
அவலத்தை மறப்போமோ?

தெருவெங்கும் போட்டெரித்துச்
சிறைக்குள்ளே
கண்பிடுங்கிக் கழுத்தரிந்து
நாடெங்கும் தமிழினத்தின்
குருதியினால் நனைத்ததை நாம் மறப்போமா?

நூல்நிலையம் கொளுத்தி எங்கள்
நுண்ணறிவைக் கெடுக்கவந்த
வால் இல்லாக் குரங்குகள் செய்
வஞ்சனையின் வடுக்களெங்கள்
நெஞ்சைவிட்டு மாறிடுமோ?

யாழ்ப்பாண வீதியிலும் திருக்கோணமலையினிலும்
குமுதினிப் படகினிலும்
கொக்கட்டிச் சோலையிலும்

அழிஞ்சிப் பொத்தானை
அம்பாறை மூதூரில்!
துண்டாடிக் குவித்தவர்தம்
எண்ணிக்கை மறப்போமா?
திருமலையின் நிலப்பரப்பைத் திருடிப் பறித்ததையும்
அம்பாறைப் பூமியினை அபகரித்த கொடுமையையும்
மட்டுநகர்த் தேனாட்டை மழுங்கடித்த துயரினையும்
மன்னார் வன்னியினை வாரி எடுத்ததையும்
மண்ணோடு போம்வரையும்
மறந்திடவும் முடிந்திடுமோ?
இப்படியாய் நாளாந்தம் எமதீழம் பறிபோக
எப்படி நாம் பார்த்திருந்து ஏங்குவதாம் சொல்லுங்கள்?

அடிமைகளாய் எத்தனை நாள்
அழுந்துவது என்றெண்ணி
விடிவுதனைக் கண்டுரிமை
வெளிச்சத்தில் வாழ்ந்திடவே
மாவீரர் பாதையிலே
மக்களெல்லாம் எழுந்திடுவீர்!

மண்ணுக்காய் மரணித்த
மாவீர வேங்கைகளின்
எண்ணத்தில் நனைகின்ற இந்தத்திருநாளில்
இதயமலர் கொண்டு இனிதாக அஞ்சலிப்போம்!
ஈழத்தமிழர்கள் இணைந்தொன்றுபட்டந்த
மாவீரர் பாதையிலே
பாதம் பதித்திடுவோம்!
நாளை தமிழ் ஈழத்தை நன்றாய் அமைத்திடுவோம்!
என,
மாவீரர் பாதையிலே மக்களெல்லாம் எழுந்திடுவீர்!

26.11.1992 இல், கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிகழ்ந்த மாவீரர் நினைவு வழா அரங்கில் பாடியது.

# அணி திரன்டொரு பரணி பாடுவோம்

"இராவணன் என்றொரு இன்றமிழ்க் கோமகன்
இருந்து நல்லாட்சியை இனிதுற ஆண்டதும்
புராதன இலங்கையில் பொலிவுறப் பூந்தமிழ்
பூமியறிந்திட நிறைவொடு வாழ்ந்ததும்
திராவிட மக்களின் திறன்மிகு கலைவளம்
தேசம் வியந்திடத் திமிரொடு வளர்ந்ததும்
இராது போனது ஏன்? எனும் சிந்தனை
எழாத நெஞ்சுகள் ஈழவர் நெஞ்சமோ?

கோணமலையிலே முகிலொடு ரகசியம்
கொடிகள் பேசிய காலம் மறைந்ததும்
வீணைக் கொடியொடு ஆண்ட இராவணன்
வெற்றி முரசதன் ஒலிகள் தணிந்ததும்
வானைத் தொடுமிறை கோட்டம் அமைத்து, நெல்
வளத்தைப் பெருக்கிடும் குளத்தைச் சமைத்ததோர்
தேனை மொழியெனக் கொண்டகுளக் கோட்டனைத்
தேடிடாதவர் செந்தமிழ் மக்களோ?

எல்லாளன் என்றொரு சோழ மன்னவன்
இனியதமிழரின் இறைமை காத்ததும்
பொல்லாத அந்நியப் படைக்கு அஞ்சிடாப்
பண்டார வன்னியன் வீரம் புரிந்ததும்
நல்லூரி லேயிருந்(து) அரசு ஓச்சிய
நாயகன் சங்கிலி யாலுளம் மகிழ்ந்ததும்
இல்லாது போனது ஏனெனக் கேட்டுமே
எழுச்சி கொள்ளாதவர் ஈழத் தமிழரோ?

தாழ்விலாத நிலை தன்னில் வாழ்ந்த நம்
தமிழர் வாழ்வியல் நிலை சரிந்ததும்
நீள் சரித்திரப் பெருமையோ(டு) ஆண்டவர்
நிலப் பரப்பினில் அடிமைகளானதும்
பாழ் நிலையது பற்றித் தொடர்ந்திடப்
பைந்தமிழ்க் குலம் பணிந்து வாழ்வதும்
ஊழ்வினைப் பயன் என்று வாழ்ந்திடும்
உணர்ச்சியற்றவர் உண்மைத்தமிழரோ?

சோழர் பாண்டியர் சேரர் என்று முச்
சுந்தரத் தமிழ் மன்னராண்டதும்
ஈழம் தொட்டுயர் இமய மலை வரை
இனிய புலிக்கொடி ஏற்றி வைத்ததும்
வேழம் நிகர்த்த வெம் வீரர் படையணி
விரைந்து பற்பல நாடு வென்றதும்
ஞாலம் மீதிலே மறந்து கீழ்மையில்
நலிந்து வாழ்பவர் நற்றமிழரோ?

இறந்தகால நிகழ்வு இவைகளால்
ஏது பயனென எண்ணி நழுவினும்
மறைந்த தமிழரின் மாண்பை மீட்டிட
மலர்ந்த புலிப்படை வீரம் புரிவதும்
சிறந்த போர்முறை யோடு அந்நிய
சிங்களப் படை தன்னைச் சாய்ப்பதும்
அறிந்து ஓர்முறை அவரை வாழ்த்திட
அஞ்சி நிற்பவர் அருமைத்தமிழரோ?

கோட்டை மீதிலே கொடியை ஏற்றியே
''கொக்காவில் முகாம்'' தகர்த் தெறிந்ததும்
மாட்டை விரட்டிய வாறு ஆமியை
''மாங்குளத்திலே'' ஓட வைத்ததும்

வேட்டையிடவென விரைந்த படைகளை
வீதியில் பிணமாகச் சாய்த்ததும்
நாட்டிலே புலிவீரர் சாதனை
நாமவர் செயல் மறந்து வாழ்வதோ?

மான வேங்கைகள் ஒன்று கூடியே
மரபு வழியிலோர் போர் தொடுத்ததும்
ஆனையிறவிலே நடந்த அச்சமர்
அகிலம் முழுவதும் கண்டு வியந்ததும்
சேனைகள்! பதினாயிரம் தொகைச்
சிங்களப் படை வந்து குவிந்ததும்
தானமாய் உயிர் தந்தும் எதிரியின்
தலைகள் கொய்தவர் புலிகள் அல்லவோ?

இரண்டு இராணுவம் மோதும் சமரென
''இலண்டன் வானொலி'' எடுத்துரைத்ததும்
திரண்ட எதிரியின் ''பல வேகம்'' குன்றியே
திகைத்து ஆமையாய் ஊர்ந்து நின்றதும்
மிரண்ட நிலையிலே வானவூர்திகள்
வீசும் குண்டுகள் இலக்கிழந்ததும்
வரண்ட வெளியிலே வீரகாவியம்
வரைந்த புலிகள் மாவீரர் அல்லவோ?

மணலாற்று எல்லையைத் தாண்ட எண்ணியே
வந்த எதிரியைத் திணறடித்ததும்
தணலாகக் கொட்டிய குண்டு மழையிலே
தலை நனைவுறச் சமர் புரிந்ததும்
பிணமாகிப் பூவுடல் மண்ணில் வீழினும்
பிறந்த மண்ணதன் பெருமை காத்ததும்
இணையிலாத நம் மாவீர வேங்கைகள் – (செய்த)
ஈகைக் குலகிலே ஈடுமுள்ளதோ?

கடலில் எதிரியின் கலங்கள் தகர்க்கையில்
கனலில் எரிந்துடல் அலையில் கரைந்ததும்
உடலம் சிதறியே உயிர் பிரியினும்
ஊர்தியோடு போய் முகாம் தகர்த்ததும்
விடலை வயதினை எட்டு முன்னர் மண்
விடுதலையிலே வேட்கை கொண்டதும்
படையலாய் அவர் தம்மை ஈந்ததைப்
பாடிடும் திறன் யானறிகிலேன்!

தமிழர் கூட்டமே தமிழர் கூட்டமே
தரணி மெச்சநாம் நிமிர்ந்து வாழவே
இமைகள் போலெமைக் காத்த வேங்கைகள்
இனிய கனவினை நனவு பண்ணுவோம்
அமுதமாம் தமிழ் ஈழம் மீட்கவே
அணிதிரண்டொரு பரணி பாடுவோம்
சுமை சுமந்த மாவீரர் தாகமாம்
சுதந்திரத் தமிழ் ஈழம் வெல்லுவோம்!

ஈழநாதம்
(23. 11.92)

*22-11-1992* அன்று, யாழ். கொக்குவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அரங்சில் இடம்பெற்ற மாவீரர் நாள் விழாவில் படிக்கப்பட்டது.

★ ★ ★

# வான் முகிலே! அழுவது ஏன்!

**வா**ன் முகிலே ஏன் அழுதாய்! ஈழமண்ணின்
இளமைந்தர் படுந்துயரைக் கண்டு நொந்தா?
நான் என்ற அகந்தையினைக் கொண்ட மாற்றான்
நாள் தோறும் குண்டுமழை பொழிதல் கண்டா?
மீன் மிதந்த ஏரியிலே! எங்கள் நாட்டு
மீனவரின் உடலங்கள் மிதத்தல் கண்டா?
தேன்விஞ்சு சுவைத்தமிழன் சோகம் கண்டோ?
சிந்துகிறாய் வான்முகிலே சேதி சொல்லாய்!

செந்தமிழர் ஈழத்தின் திருவை எல்லாம்
தீயிட்டார்! திருடியவர் பறித்துச் சென்றார்
வெந்த புண்ணில் மென்மேலும் வேலைப் பாய்ச்சி
வேதனையைத் தரும் வெறியர் செயலைக் கண்டா?
சந்தமிகு தழிழீழ மண்ணை மீட்கச்
சந்தனமாய்த் தேய்கின்ற மாவீரர் தம்
விந்தைமிகு தற்கொடையால் மனசு நொந்தா
விண்முகிலே அழுகின்றாய்? விளக்கம் சொல்லாய்!

''பொலி'' விளைந்த வயல்வெளியில் களைகள் மண்டி
பொலிவிழந்து கிடக்கின்ற துயரங்கண்டோ!
நிலையிழந்து தமிழ்ச்சாதி காடு மேடாய்
நிம்மதிக்காய் அலைகின்ற அவலங்கண்டோ?
விலைமாதர் பெற்றெடுத்த வெறியர் கூட்டம்
விளைவிக்கும் கொடியதுயர் கண்டு நொந்தா
நிலைகுலைந்து நெஞ்சுருகி முகிலே நீயும்
நிலம் நனைய அழுகின்றாய் ஈழமண்ணில்?

பால் சுரக்கும் பசுவோடு ஆடு கோழி
பழத்தோட்டம் பனை தென்னை கமுகஞ்சோலை
கால்வைத்து வரப்பினிலே நடக்கும் வேளை
கதிர்சரிந்து வழிமறிக்கும் வயற் பரப்பும்
ஆல் அரசு அத்தியோடு வேம்பும், மாவும்
அரிய பலா எலுமிச்சை தோடந்தோப்பும்
பாழ்படவே வைத்ததினால் பசியின் வாட்டம்
பகர்கின்ற முகங்கண்டோ! அழுகின்றாய் நீ?

உண்பொருளும் உடுபொருளும், ஊர்தியோடு
எந்திரங்கள் இயங்க வைக்கும் எரிபொருளும்
கண்மருந்தும், புண்மருந்தும் விசர்நாய்க் கூட்டம்
கடித்தவுடன் ஏற்கின்ற விசமருந்தும்
மண்ணகத்தின் பசிமாற்றும் உழவர்க்கான
மருந்துவகை நாசினிகள் உரத்தைக்கூட
கண்ணவிந்தோர் தடை செய்த காட்சி கண்டோ
கருமுகிலே பொருமிநிதம் அழுகின்றாய் நீ?

விமானத்தின் குண்டுகளால்! வீடு கோயில்
விளைநிலங்கள், வீதியோடு பாலம் பள்ளி
சுமையேற்றும் வண்டியோடு கிணறு, நோயின்
துயர்தீர்க்கும் மருத்துவஞ்செய் மனையும் கடையும்
அமைதியொடு எழில்பொலியும் பூங்கா! மக்கள்
அன்றாடம் பொருள்வாங்கும் சந்தை யாவும்
இமைப் போதில் மண்மேடாய் ஆக்கும் தீயோர்
இழிசெயலைக் கண்டேதான் அழுகின்றாயோ?

அகதிகளாய் மக்களினைத் தெருவில் விட்டும்
அழித்தொழிக்கும் நோக்கினிலே அவரைச்சுட்டும்
தகவுடைய தாய்க்குலத்தின் உடலைத் தீண்டி
தமதிச்சை வெறிதணிக்கும் கொடுமை கண்டும்

பகலிரவு பாராது "செல்லை" ஏவி
பலியெடுத்து அமைதியினைச் சீர்குலைத்தும்
நகை, தாலி அறுத்தெடுத்து நாசம் பண்ணும்
நரக நிலை கண்டேதான் அழுகின்றாயோ?

சுத்தமனத் தோடெமது சொந்த மண்ணின்
சுதந்திரத்தைத் தாவென்று பரிந்து கேட்டும்,
நித்தமவர் தரமறுத்து எங்கள் சொந்த
நிலம் பறித்து எமை ஓடு எனத்துரத்தி
புத்தனது போதனையைத் தலை கீழாக்கிப்
போர் தொடுத்து எம்மினத்தைப் பொசுக்க எண்ணி
எத்தர் குலம் செய்யுமிருட் துயரங்கண்டோ
இரங்கிமனம் துடிதுடித்து அழுகின்றாய் நீ?

கார் முகிலே நீயழுதால் எமக்கு இன்பம்
காய்வுற்ற நிலம் நனையும், கழனி பொங்கும்
ஏர் நடத்தும் எமதுழவர் நெஞ்சில் இன்பம்
ஏறிவரும், இன்முகத்தில் பசுமை பூக்கும்!
சீர் அற்ற கால நிலை என்று அஞ்சும்
சிங்களவர் படை மெல்லத் தரித்து நிற்கும்!
போர் முகத்தில் புலி வீரர் இதனைக் கண்டு
புன்னகைப்பர் தமிழர் நாம் அழவே மாட்டோம்!

அழுவதினி இல்லையெனத் தமிழர் நாங்கள்
ஆய்ந்துணர்ந்து முடிவெடுத்தோம்! அழவே மாட்டோம்!
தொழுதுறையும் நிலை என்றும் இல்லை கையின்
துப்பாக்கி தூங்காது முழங்கும் மாற்றான்
அழுதழுது எல்லையினை விட்டு ஓடி
அகல்கின்ற வரை விழியை இமையும் தீண்டா!
எழுகதிராம் தலைவனணி நிற்குமெங்கள்
இதயமினி ஒரு போதும் அழவே மாட்டா!

தடை போட்டுத் தடை போட்டு எழுச்சி கொண்ட
தமிழீழ மக்களினை அடக்கவென்று
மடையர் குலம் கண்ட கனா அனைத்தும் இன்று
மண்ணாகிப் போன நிலை உணர்ந்து கொண்டார்
படை வலிமை கொண்டெம்மைப் பணிய வைக்கப்
பார்த்தவனெம் மனவலிமை கண்டு வேர்த்து
குடைகின்ற எண்ணங்கள் நெஞ்சைத் தாக்கக்
குழம்புகிறான் எதிரி நாம் அழவே மாட்டோம்!

தங்கநிகர் தமிழீழ மண்ணை மீட்கத்
தமதுயிரை அர்ப்பணித்த மாவீரர்கள்
இங்கின்னும் விதையாக வீழ்ந்திட்டாலும்
இரத்தத்தால் ஈழமின்னும் சிவந்திட்டாலும்
சிங்களவன் தமிழீழ மண்ணை ஆள
சிறுபொழுதும் அனுமதித்து உறங்க மாட்டோம்
எங்கள் புலிக்கொடி தன்னை வையம் ஏற்கும்
இனிய நாள் வரும் வரைக்கும் ஓயமாட்டோம்.


ஈழநாதம்
(03-01-1993)

(ஒருபகுதி பிரசுரமானது)

ஈழநாதம் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்புப் பரிசுத் தெரிவில் முதலாம் பரிசு பெற்றது.

*23-11-1992இல் கொக்குவில் இந்துக்கல்லூரி மாவீரர்நாள் விழா கவியரங்கில் பாடப்பட்டது.*

பொது நூலகம்,
1994



04.04.1984 அதிகாலை நான்கு மணிக்கு, என் தந்தை காலமானார். ஆனால் அதற்கு முதல் நாளான 03.04.1984 அதிகாலை மூன்று மணிக்கே, என்னைப் படுக்கையில் வைத்து வேட்டையாடப் பாய்ந்தது சிறீலங்காவின் ஏவற்படை.

நான் 'விழிப்போடு' இருந்தமையால் அவர்கள் வெறுங்கையோடு திரும்பினர் ஆயினும் பெற்று வளர்த்து, என்னை மார்மீதும் தோள்மீதும் சுமந்து பாராட்டிச் சீராட்டி வளர்த்த என் தந்தையின் உடலுக்கு, நால்வரில் ஒருவனாய்த் தோள் கொடுத்துச் சுமக்கவோ, அள்ளி அள்ளி அமுதூட்டிய தந்தைக்கு ஒரு பிடி மண்கூடப் போடவோ, எனக்கு வாய்ப்பில்லாது போனது வாணாளாவிய வருத்தமே.

நான் ஆயுதப் போராட்டம் எதுவும் செய்தமைக்காகத் தேடப்படவில்லை; காகிதப் போராட்டம் செய்தமைக்காகவே தேடப்பட்டேன். அதாவது, கவிதைகளை ஆயுதமாகப் பாவித்த குற்றந்தான். ஏதோ ஒருவகையில் எனது கவிதைகள் அவர்களுக்குக் கலக்கத்தை ஊட்டியிருக்கவேண்டும்.

மேற்படி நிகழ்வு ஒரு சோக நிகழ்வாகக் காணப்பட்டாலும் அதிலொரு சுகத்தையும் நான் அனுபவித்திருக்கின்றேன். ஏனெனில், அந்த நிகழ்வின் மூலம் எனது கவிதைகளின் இலக்குப் பிசகாமைக்கான சான்று வெளிப்பட்டமைதான்!

இது ஒரு தமிழ்த்தாய் வெளியீடு